2021 - இதழ் 04

இலவசம்

## சித்திரை - 2021

# உள்ளான மனிதன்

## மென்பிரதி

GRACE TABERNACLE

APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்தர சஞ்சிகை - இலவசம் 2021 - இதழ் 04


## ஆண்டவர் இயேசு சொன்னார்:

**ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.**

உள்ளூர் சபையின் தொடர்புகளுக்கு

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2021 - இதழ் 04


பக்கம் **4**

### ஓப்புரவாக்கப்பட்டோம்

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு இயேசு உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

பக்கம் **6**

### அதிகாரங்களுக்கு கீழ்ப்படியுங்கள்

குடும்பமாக இருந்தாலும், பாடசாலையாக இருந்தாலும், வேலை செய்யும் இடமாக இருந்தாலும், தேவனுடைய சபையாக இருந்தாலும் பொறுமையும் கீழ்ப்படிதலும் இன்றியமையாதது.

பக்கம் **14**

### பிரசங்கக் குறிப்புகள்

மனிதர்கள் பார்க்கின்ற பிரகாரமாக கர்த்தர் பார்ப்பவர் அல்லர். இந்த உலகத்தின் பார்வையிலே, பெரும்பான்மையினராய் இருக்கின்றவர்களுடைய கருத்துக்களே எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

பக்கம் **16**

### புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


**கிரேஸ் (ற்)ரபனக்கல்**


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

gtachurch.ca/contact


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 16ம் பக்கத்திலிருந்து...


**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**

... சித்திரை 3, 4, 5, 7, 9, 11, 12, 18, 21, 22, 23, 24, 26, 27, 29

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**

... சித்திரை 1, 2, 3, 4, 7, 9, 11, 12, 15, 18, 21, 22, 24, 26, 27

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**

... சித்திரை 5, 7, 9, 12, 15, 16, 18, 27, 30

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**

... சித்திரை 1, 5, 12, 15, 18, 19, 21, 22, 23, 25, 27, 29, 30

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**

... சித்திரை 5, 6, 7, 9, 15, 18, 22, 25, 29, 30

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**

... சித்திரை 1, 4, 8, 9, 10, 11, 16, 17, 19, 20, 22, 23, 28

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**

... சித்திரை 1, 5, 10, 13, 14, 16, 17, 26, 28, 30

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**

... சித்திரை 1, 2, 6, 8, 10, 13, 16, 17, 20, 23, 24, 28

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**

... சித்திரை 9, 12, 14, 17, 20, 22, 23, 24, 28

**பொறுமையோடு காத்திருங்கள்**

... சித்திரை 1, 2, 7, 10, 12, 14, 26, 29, 30

**தேவ நீதி வெளிப்படும்**

... சித்திரை 1, 7, 13, 14

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**

... சித்திரை 1, 2, 6, 8, 16, 19, 20, 25, 28

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**

... சித்திரை 6, 8, 13, 14, 15, 16, 17, 19, 20, 24, 27, 28, 30

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**

... சித்திரை 1, 2, 19, 25, 27


gtachurch.ca

# ஒப்புரவாக்கப்பட்டோம்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

பரிசுத்தவாரத்தோடு இம்மாதம் ஆரம்பமாகியுள்ளது. இயேசுவின் அளவற்ற அன்பையும் பிதாவாகிய தேவனின் அன்பையும் அதிகமாய்த் தியானிக்கும் காலமாயுள்ளது.

இயேசுகிறிஸ்து பேதுருவை நோக்கி "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என்று கூறினார். மேற்கொள்ளுவதோ அல்லது மேற்கொள்ள முயற்ச்சிப்பதோ ஓர் போராட்டத்தை வெளிப்படுத்துகின்றது. ஆம், பாதாளத்திற்கும் சபைக்கும் இடையேயான போராட்டத்தின் முடிவைக்குறித்து இயேசு இந்த வசனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாதாளத்திற்கும் சபைக்கும் இடையேயான போராட்டத்தை நோக்கும் போது, பாதாளத்தின் நோக்கம் என்ன? அதின் பெலன் என்ன?
சபையின் நோக்கம் என்ன? அதின் பெலன் என்ன?

பாவத்தின் பலன் மரணம். மரணத்தின் கூர் பாவம். பாதாளமானது மரணத்தினால் எல்லோரையும் நித்திய மரணத்திற்கென்று கட்டிப்போட்டது. இதுவே பாதாளத்தின் பெலன்.

இயேசு எம்மாவுருக்குப்போன சீஷர்களுடன் உரையாடும்போது மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் தமது நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட வேண்டியதென்ற வேதவாக்கியத்தை விளக்கிக் கூறினார்.

இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசு மூலமாய் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவன் பிரியம் கொண்டார்.

இயேசுவின் நாமத்தில் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் பிரசங்கிக்கப்படவும், நாம் தேவனோடு நம்மை ஒப்புரவாக்கிக்கொள்ளவும், இயேசு தமது சபையை இவ்வுலகில் ஸ்தாபித்தார்.

இது சபையின் பெலானாயுள்ளது. இயேசுவின் நாமத்தில் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் தேவனோடு ஒப்புரவாகுதலும் சபையின் பெலனாயுள்ளது. இதை பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ளுவதில்லை.

பாவத்திலே கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரியை வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவிடத்தில் கொண்டு வந்து, அவளை நடுவே

நிறுத்தி போதகரே, இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டு மென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கி றாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள்.

இயேசு அவர்களைப் பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொன்னார்.

அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்ப ட்டு, பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்வி ட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள்.

இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத்தவிர வேறொருவரையுங் காணாமல்: ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார். அதற்கு அவள்: இல்லை, ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை, நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.

அந்த ஸ்திரியின் வாழ்வைப் பாதாளம் விழுங்கிவிடாதபடி இயேசு அவளை மன்னித்து விடுதலையாக்கினார். அவ்விடத்திலே மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு இயேசு உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். ஆகையால் கர்த்தரி டத்தில் திரும்புவதற்கு ஒருபோதும் தாமதியாதே.

அவ்விதமாய் மனந்திரும்புபவர்கள் முன் தடுக்கலை போட்டு பாதாளத்தின் ஊழியனாகாமல் இயேசுவின் நாமத்தில் மனந்திரும்புதலையும் பாவமன்னி ப்பையும் தேவனோடு ஒப்புரவாகுதலையும் அறிவிக்கும் ஊழியனாயிருப் போமாக. அவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞாயிறு காலை 10:00 மணிக்கு நேரலையில் **www.gtachurch.ca/live** இணையதளத்தின் வழியாக தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அழைக்கின்றேன்.

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# அதிகாரங்களுக்குக் கீழ்ப்படியுங்கள்!

பாடசாலையிலே கற்கும் நாட்களிலே, ஒவ்வொரு வகுப்பிலுள்ள வகுப்பாசிரியர்களும், தங்கள் தங்கள் வகுப்புக்களிலே மாணவத் தலைவர்களை (Monitors) ஏற்படுத்தப்படுவது வழக்கம். பாடசாலை நிர்வாக ஒழுங்கின்படி, தேவையேற்படும் போதெல்லாம் மற்றய மாணவர்களை மேற்பார்வை செய்வதற்கு, மாணவத் தலைவர்களுக்கு சில அதிகாரங்களை கொடுத்திருப்பார்கள். அவ்வண்ணமாக ஒரு வகுப்பிலே, குறிப்பிட்ட பாடத்தின் ஆசிரியர் அன்று பாடசாலைக்கு வரமுடியாதிருந்ததால், குறிப்பிட்ட மாணவத் தலைவன் அந்த வகுப்பை மேற்பார்வை செய்து கொண்டிருந்தான். அந்த வேளையிலே, மாணவ தலைவனின் வீட்டிற்கு அருகில் வசித்து வந்த மாணவனொருவன் குறும்புத்தனமாக நடந்து, மற்றய மாணவர்களை குழப்பிக் கொண்டிருந்தான். அதனால், அந்த மாணவ தலைவன், பாடசாலையின் ஒழுங்கின்படி, குறும்பு செய்யும் அந்த மாணவனை எழுந்திருக்கும்படியாக கட்டளையிட்டான். ஆனால் அந்த மாணவனோ, மாணவ தலைவனை அசட்டை செய்து, அவனை ஏளனம் செய்தான். இந்த சம்பவம் வகுப்பாசிரியரிடம் அறிவிக்கப்பட்டு, அடுத்த நாள், அதைக்குறித்து விசாரிப்பேன் என்று வகுப்பாசிரியர் கூறியிருந்தார்.

வீடு திரும்பிய, குறும்பு செயல்களை செய்த அந்த மாணவன், வீட்டிற்கு அருகிலே வாழும் அந்த மாணவத் தலைவன் என்னை பலர் முன்னிலையிலே அவமதித்தான் என்று தன் பெற்றோரிடம் கூறினான். கோபமடைந்த பெற்றோர், அந்த மாணவத் தலைவனின் பெற்றோரிடம் சென்று தர்க்கம் செய்தார்கள். மறு நாளிலே, அந்த மாணவனின் பெற்றோர் பாடசாலைக்கு சென்று, அந்த மாணவத் தலைவனைக் குறித்து முறையீடு செய்தார்கள். வகுப்பு ஆசிரியர் அவர்களை நோக்கி: இந்த பாடசாலைக்கு சில ஒழுங்கு முறைகள் உண்டு. அதன்படி மாணவத் தலைவர்களுக்கு சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆசிரியர் இல்லாத வேளையிலே, மாணவர்கள் யாவரும் குறிப்பிட்ட மாணவத் தலைவனுக்கு கீழ்ப்படிய வேண்டும். ஆனால் மாணவ தலைவன் ஏதும் முறைகேடாக நடந்து கொண்டால் அதை குறித்து பாடசாலை நிர்வாகம் விசாரணை செய்யும். நேற்றைய நாளில் நடந்த சம்பவத்திலே, உங்கள் மகன், மாணவ தலைவனுக்கு கீழ்ப்படியாமல், எதிர்த்து கலகம் செய்திருக்கின்றான். அது அவனுக்கு நல்லதல்ல. மாணவர்கள் ஆளுமையில் வளர்ந்து சிறந்த குடிமக்களாவதற்கு,முதலாவதாக அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிய பழக வேண்டும் என்று கூறினார். ஆனாலும் அந்தப் பெற்றோர், தங்கள் மகனுக்கு நல்லொழுக்கத்தை கற்றுக் கொடுப்பதற்கு பதிலாக, வகுப்பாசிரியருக்கு எதிராக, அதிபரிடம் முறையிட்டார்கள். சம்பவத்தை அலசி ஆராய்ந்த அதிபர், அந்த பெற்றோரை நோக்கி: நீங்கள் உங்கள் மகனிற்கு கீழ்ப்படிதலையும், ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று அறிவுரை கூறினார். அதையும் ஏற்றுக் கொள்ள மனதில்லாத அந்தப் பெற்றோர், தங்கள் மகனை வேறு பாடசாலைக்கு மாற்றம் செய்து விட்டார்கள்.

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் என்று பரிசுத்த வேதாகமம் அறிவுரை கூறுகின்றது. பிள்ளைகளுடைய மனதிலே நல்ல வித்துக்களை விதைக்கின்றவர்கள், அவரிகளிடமிருந்து நற்பலன்களை அறுவடை செய்

வார்கள். ஆனால் பிள்ளைகளுடைய மனதிலே தீமையான வித்துக்களை விதைக்கின்றவர்கள் அதன் பின்விளைவுகளை அறுவடை செய்வார்கள். ஏனெனில் ஒரு மனிதன் எதை விதைக்கின்றானோ அதையே அறுவடை செய்வான்.

இன்றைய உலகிலே, முன்பு இருந்ததைவிட இன்னும் அதிகமாக மனிதர்கள் மத்தியிலே கீழ்ப்படியாமை மிக அதிகமாக பெருகி வருகின்றது. அதன் பின்விளைவுகள் மிகவும் பாதகமானதாகவே இருக்கும். நம்முடைய முதற்பெற்றோராகிய ஆதாம் ஏவாளுடைய வாழ்க்கையிலே, தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதைப் பார்க்கிலும், வலுசர்ப்பமாகிய பிசாசானவனுடைய தந்திரமான ஆலோசனைக்குக் கீழ்ப்படிவது நல்லதாக காணப்பட்டது. அதன் பின்விளைவாகவே அவர்கள் தேவ சாயலை இழந்து போனார்கள். நித்திய மரணத்திற்கு உட்பட்டவர்களானார்கள். அதாவது, இந்த உலகிலே பிறக்கின்ற மனிதர்கள் யாவரும் ஒருநாள் மரிக்க வேண்டும். மனிதர்கள் யாவரும் ஒரு குறிப்பிடப்பட்ட ஆண்டுகளுக்கு இந்தப் பூமியிலே வாழ்ந்து மரித்துப் போகின்றார்கள். அந்த கால எல்லைக்கு ஒரு ஆரம்பமும் ஒரு முடிவும் உண்டு. மனிதனானவன் இந்த பூமியில் வாழ்ந்த நாட்களை நிறைவேற்றிய பின்பு, ஒரு நாள் நியாயத் தீர்ப்பிலே, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்க வேண்டும். அந்த நாளிலே ஒரு மனிதன் நித்திய மரணத்திற்கு தீரக்கப் படுபவனாக இருந்தால், அந்தக் காலத்திற்கு முடிவிராது. இதுவே நித்திய மரணம். அந்த நாளிலே ஒருவன் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பவனாக இருந்தால், அவன் நித்திய நித்தியமாக பரலோகிலே கர்த்தரோடு இருப்பான். இதுவே நித்திய வாழ்வு. பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். (தானியேல் 12:2)

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னதாக, ரோமருடைய ஆட்சிக் காலத்திலே, ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களிலே, கிறிஸ்தவ சபையானது மிகவும் துன்புறுத்தப்பட்டது. சிலர் அக்கினிக்கிரையானார்கள், சிங்கங்களுக்கு இரையானார்கள், வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள். கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். ஏன் இப்படியான உபத்திரவத்திற்கு உள்ளானர்கள்? களவு, கொலை, கொள்ளை, பொய், விபச்சாரம் செய்ததாலோ? ஏதாவது குற்றங்களை செய்ததனிமித்தமாகவோ? அல்லது தீமையான செயல்களை செய்ததாலோ? இல்லை! பாதாளத்தின் நித்திய மரணத்திற்கு தப்பி, பரலோகிலே நித்திய வாழ்வை பெற்றுக் கொள்ளும்படி, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தபடியினாலேயே அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். அதினாலே அவர்கள் நற்செய்தி கூறுவதை விட்டுவிடவில்லை. (பிலிப்பியர் 1:13-14)

தேவனுக்குப் பிரியமான தானியேல் என்னும் மனிதன், பாபிலோன் தேசத்திலே சிறைக் கைதியாக கொண்டு போகப்பட்டு, ராஜ அரண்மனையிலி

ருந்து தேசத்தின் ராஜாவிற்கு சேவை செய்து வந்தான். தானியேல் மேல் எரிச்சல் கொண்ட மனிதர்கள், தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள் ஆனாலும் ஒரு முகாந்தரத்தையும், குற்றத்தை யும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது. அவன் உண்மையுள்ள வனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை. அப்பொழுது அந்த மனுஷர்: நாம் இந்த தானியேலை அவனுடைய தேவனைப்பற்றிய வேதவிஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடித்தாலொழிய அவனை வேறொன்றிலும் குற்றப் படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடிக்கக்கூடாது என்றார்கள். அதனால், எவனாகிலும் முப்பது நாள்வரையில் தேசத்தின் ராஜாவைத் தவிர எந்த தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி, யாதொரு காரியத் தைக்குறித்து விண்ணப்பம்பண்ணினால், அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட வேண்டும் என்று ராஜாவை வேண்டிக் கொண்டார்கள். அப் படியே ராஜாவாகிய தரியு அந்தக் கட்டளைப்பத்திரத்துக்குக் கையெழு த்து வைத்தான். தானியேலோவென்றால், தேவனாகிய கர்த்தரை ஆராதி த்தால் தான் சிங்கத்தின் கெபியிலே போடப்படுவேன் என்று அறிந்திருந் தும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான். இந்த உலகத்தின் மேலான அதிகாரங்களோ, கொடூரமான சிங்கங்களோ, வேறெந்த காரியங்களோ, தானியேல் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுவதை தடுக்க முடியவி ல்லை. அவர்களுடைய உயிர் மிரட்டல்களுக்கும் அவன் சற்றும் பயப்பட வில்லை. (தானியேல் 6:1-17)

கருப்பொருளாவது, தேவனை சேவிப்பதைக் குறித்த காரியத்தைத் தவிர, மற்றய காரியங்கள் யாவற்றிலும் நாம் மேலான அதிகாரத்திற்கு கீழ்ப்ப டிய வேண்டும். அதாவது, தேவன் பாவம் என்று விலக்கிய காரியத்தை செய்யும்படியாக நாம் பணிக்கப்பட்டால், நாம் அந்த அதிகாரத்திற்கு உடன்பட்டவர்கள் அல்லர். ஆனால் மற்றய காரியங்கள் எல்லாவற்றிலும் நாம் அதிகாரத்திற்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

ஆனால் இன்றைய உலகிலே தேவனை அறிந்த மனிதர்களிலும் சிலர் தேவன் நியமித்த அதிகாரங்களையும் அற்பமாக எண்ணுகின்றார்கள். தேசத்தின் ராஜாவானாலும், சபையின் போதகரானாலும், அவர்கள் அதி காரங்களுக்கு எதிர்த்து நிற்கின்றவர்களாக மாறிவிடுகின்றார்கள். தங்கள் கீழ்ப்படியாமையை நியாயப்படுத்த பல காரியங்களை கூறிக் கொள்கி ன்றார்கள். தேவனுக்காக எதையும் சகித்துக் கொள்ள ஆயத்தமாக இருக் கின்றோம் என்று அறிக்கை செய்கின்றவர்கள், அற்ப காரியங்க ளுக்காக கலகங்களை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். நாம் பல நியாய ங்களை கூறிக் கொள்ளலாம், ஆனால் அதிகாரங்களுக்கு கீழ்ப்படியும் படியாகவே நாம் தேவனிடத்திலிருந்து கட்டளைகளை பெற்றிருக்கின் றோம்.

பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனை யாயிருக்கிறது. (எபேசியர் 6:1-3)

அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந் திருங்கள் (1 பேதுரு 3:1)

அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளு ங்கள் பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையு ள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.

வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, சரீரத்தின் படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும் நடுக்கத் தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து. மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங் கள். (எபேசியர் 6:5-6)

உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாத ம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்க த்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள் அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே. (எபிரெயர் 13:17)

எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன் ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிரு க்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான் அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள். மேலும் அதிகாரிகள் நற் கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்; ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்கவேண்டுமானால், நன் மைசெய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும்பொருட்டு, அவன் தேவஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமை செய்தால் பயந்திரு. பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவி ல்லை. தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவஊழியக்காரனாயிருக்கிறானே. ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்த மும் கீழ்ப்படியவேண்டும். இதற்காகவே நீங்கள் வரியையும் கொடுக்கிறீர் கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்துவருகிற தேவ ஊழியக்காரரா யிருக்கிறார்களே. ஆகையால் யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைக ளைச் செலுத்துங்கள் எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள் எவனுக்குப் பயப்படவேண் டியதோ அவனுக்குப் பயப்படுங்கள் எவனைக் கனம்பண்ண வேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள். (ரோமர் 13:1-7).

குடும்பமாக இருந்தாலும், பாடசாலையாக இருந்தாலும், வேலை செய்யும்

இடமாக இருந்தாலும், தேவனுடைய சபையாக இருந்தாலும் பொறுமையும் கீழ்ப்படிதலும் இன்றியமையாதது.

உன் பெற்றோருக்கு கீழ்ப்படி என்பதே ஒரு பிள்ளைக்கு கொடுக்கப்பட்ட கட்டளை. அதன்படியே ஒரு பிள்ளையானவன் தன் கணக்கை ஒப்புவிப்பான். ஆனால் பெற்றார் தங்கள் பிள்ளையை தகாதவிதாமாக நடத்தினால், அதற்குரிய கணக்கை அவர்கள் கொடுக்க வேண்டும். தேவன் ஒருவரே நீதியுள்ள நியாயாதிபதி. ஒருவரும் தப்பிப் போகமுடியாது.

இன்று கீழ்ப்படியாமையானது சபைகள் நடுவிலும் பெருகிக் கொண்டிருக்கின்றது. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும் இருக்கின்றார்கள். (2 தீமோ 3:1-7)

ஒரு மனிதனானவன், ஒரு சபை ஐக்கியத்திலே இணைந்து, அங்கே இருந்து தேவனை சேவிக்கும்படி தீர்மானம் செய்து கொண்டான். அது அவனுடைய சொந்தத் தீர்மானம். அவன் அங்கே இருக்கும் வரைக்கும் அந்த சபையின் அதிகாரங்களுக்கு கீழ்ப்படிகின்றவனாகவே இருக்க வேண்டும். அவன் கலகக்காரனாக மாறிவிடக்கூடாது. பாடசாலையிலே, சின்னக் காரியத்திலே, மாணவத் தலைவனுக்கு கீழ்படிய முடியாதவன், அவன் இன்னுமொரு பாடசாலைக்கு சென்றாலும், அவன் அங்குள்ள மாணவ தலைவனுக்கு கீழ்ப்படிவான் என்பதற்கு நிச்சயம் என்ன? அவன் மனம்மாறி, புதிய பாடசாலையில் கீழ்ப்படிவைக் கற்றுக் கொண்டால் அது அவனுக்கு நல்லது. அதுபோலவே, ஒரு சபை ஐக்கியத்திலே, இருக்கும் ஒரு விசுவாசிக்கு அங்குள்ள அதிகாரங்களுக்கு கீழ்ப்படிய முடியவில்லை. அதனால் அந்த விசுவாசி இன்னுமொரு சபைக்கு செல்கின்றார். அவர் முன்பிருந்த சபையின் அதிகாரத்திற்குக் கீழ்படிய முடியவில்லை என்றால், அவர் புதிதாக செல்லும் சபையின் அதிகாரத்திற்கு கீழ்படிவார் என்பதில் நிச்சயம் என்ன? அவர் மனம் மாறி, புதிதாக சென்று இணைந்திருக்கும் சபையிலே தன் சொந்த வாழ்வில் கீழ்ப்படிவைக் காட்டினால் அது அவருக்கு நல்லது.

இன்னும் சிலர் தங்களைத் தாங்களே பெரும் அபாய வலயத்திற்குள் உட்படுத்திக் கொள்கின்றார்கள். எப்படியெனில், எங்களுக்கு வேதம் நன்றாகத் தெரியும், எங்களுக்கு சபை அவசியமில்லை. ஒரு மேய்ப்பன் தேவையில்லை. எங்களுக்கு சபையின் அதிகாரங்கள் தேவையில்லை. எங்களுக்குக் கர்த்தரைத் தெரியும் அவர் எங்களோடும் பேசுகின்றார் என்று கூறிக் கொள்கின்றார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைக்குள் நீங்கள் இருந்தால், இது உங்கள் வாழ்க்கையில் தேவனால் உண்டானதா அல்லது உங்கள் சொந்த மாம்ச இச்சையினால் உண்டானதா என்பதைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாகயிருங்கள். மோசே என்னும் தேவ ஊழியருடைய

நாட்களிலே, சபையிலே பெரிதான குழப்பம் ஏற்பட்டுவிட்டது. இந்தக் குழப்பம் சபையிலே ஊழியம் செய்பவர்களாலே உண்டாயிற்று. மோசேயின் சகோதரியாகிய மிரியாமும், அவனுடைய சகோதரனாகிய ஆரோனும் அவனுக்கு விரோதமாய்ப் பேசி: கர்த்தர் மோசேயைக்கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டது (எண்ணாகமம் 12:1-9) என்பதை நாம் வேதத்திலே பார்க்கின்றோம்.

ஒரு சமயம், ஆண்டவராகிய இயேசு தன்னிடத்தில் வந்த திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம். ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார் (லூக்கா 9:36). தேவ ஊழியனாகிய மோசே இஸ்ரவேலரை வனாந்திர வழியாக வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு அழைத்துச் சென்றுகொண்டிருக்கும் வேளையிலே, அவன் இந்த பூமியைவிட்டு கடந்து செல்லும் நாள் வந்த போது, அவர் கர்த்தரை நோக்கி: கர்த்தருடைய சபை மேய்ப்பன் இல்லாத மந்தையைப்போல் இராதபடிக்கு, அந்தச் சபைக்கு முன்பாகப் போக்கும் வரத்துமாய் இருக்கும்படிக்கும், அவர்களைப் போகவும் வரவும் பண்ணும்படிக்கும், மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர் ஒரு புருஷனை அவர்கள்மேல் அதிகாரியாக ஏற்படுத்தவேண்டும் என்றான். அந்தப்படியே தேவனாகிய கர்த்தர் யோசுவா என்னும் மனிதனை மேய்ப்பனாக அபிஷேகம் செய்தார். (எண்ணாகமம் 27:12-23). கருப்பொருளாவது ஒரு சபையை நடத்திச் செல்ல ஒரு மேய்ப்பன் அவசியம். தேவனாகிய கர்த்தர் அதை ஏற்படுத்துகின்றார்.

ஒரு சபையொன்றிலே, சபையிலிருந்த மனிதனொருவனுக்கும், அந்த சபையின் மேய்ப்பனுக்கிடையிலும் கருத்து முரண்பாடு ஏற்பட்டுவிட்டது. அந்த சூழ்நிலையில், ஒருவேளை அந்த மனிதனின் கருத்து சரியானதாக இருந்திருக்கலாம் அல்லது ஒருவேளை அந்த மேய்ப்பனின் கருத்து சரியானதாக இருந்திருக்கலாம். ஆனால், அந்த சபைக்கு மேய்ப்பனாக இருப்பவரே சபையின் ஆத்துமாக்களின் கணக்கை தேவனிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால், அந்த மனிதனோ, பலர் முன்னிலையில் அந்த மேய்ப்பனோடு வாக்குவாதம்பண்ணி, அவரை அவமதித்து பேசினான். இதனால், அங்கிருந்த சில விசுவாசிகள் மேய்ப்பனை எதிர்த்துக் கொண்டு அந்த மனிதனோடு சேர்ந்து கொண்டார்கள். சில மாதங்களுக்கு பின், அந்த மனிதன் சபையைவிட்டு தன் வழியே போய்விட்டான். இந்த நிலையை சற்று சிந்தித்துப் பாருங்கள்! மேய்ப்பனோடு சண்டை செய்த அந்த மனிதன் சில விசுவாசிகளை மேய்ப்பனில்லாத ஆடுகளை போல ஆகும்படிக்கு, மேய்ப்பனுக்கும் அந்த விசுவாசிகளுக்குமுள்ள நல்லுறவை துண்டித்து விட்டான். அது மட்டுமல்ல, அவன் தன் வழியே சபையை விட்டு சென்றாலும், அந்த ஆத்துமாக்களின் கணக்கு இப்போது அவனிடம்கேட்கப்படும். பிரியமானவர்களே, தேவனாகிய கர்த்தர் செய்யச் சொல்லாத காரியத்தை துணிகரமாக நடப்பித்த கலகக்காரராகிய, கோராகு தாத்தான், ஓன் என்பவர்களும் அவர்களோடு சேர்ந்த இருநூற்று ஐம்பது பேர்களைப் போலவும் கர்த்தருடைய கோபாக்கினைக்கு உள்ளாகிவிடாதி

ருங்கள். முரட்டாடத்தையும், கீழ்படியாமையையுமல்ல, கீழ்ப்படிவையும் பொறுமையையும் விசுவாசிகளுக்கு கற்றுக்கொடுங்கள். (எண்ணாகமம் 16:1-50)

ஐக்கியத்தைவிட்டு நீங்களே உங்களைத் தனிமைப்படுத்தி விடாதிருங் கள். விசுவாசிகளை, மேய்ப்பனையும் சபையையும் விட்டு தூரப்படுத்தி விடாதிருங்கள். பிசாசானவன் உங்களையும் மற்றவர்களையும் இலகு வாக மேற்கொள்வதற்கு இடங் கொடுக்காதிருங்கள். எபேசு என்னும் சபையை சார்ந்தவர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர் களின் நிலையைக் குறித்து செய்தியை அனுப்பினார். உன் கிரியைகளை யும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர் களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்க ளைப் பொய்யரென்று கண்டறிந்ததையும், நீ சகித்துக்கொண்டிருக்கிற தையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப் படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன். ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. எனவே, மனந்திரும்பி ஆதி அன்புக்கு திரும்பும்படி அவர்களுக்கு அறிவுரை கூறினார் (வெளிப்படுத்தல் 2:1-5). எனவே உங் கள் வாழ்க்கையில், பொறுமையோடும், சகிப்புத்தன்மையோடும், கர்த்தரு டைய நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டு, அன்பின் கிரியைகளை நடப்பியுங்கள்.

இயேசு இந்த உலகத்திலே இருந்த நாட்களிலே பலதரப்பட்ட ஜனங்கள் அவரிடம் வந்தார்கள்: சிலர் அவர் பேச்சிலோ செய்கையிலோ குற்றம் பிடிக்கும்படியாக வந்தார்கள் (மாற்கு 3:2, மத்தேயு 16:1, 22:15). சிலர் சுயலாபம் கருதி அவர் பின்சென்றார்கள். (யோவான் 6:26). சிலர் அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்கவேண்டு மென்று அவரைக் காண விரும்பியிருந்தார்கள். (லூக்கா 23:8). சிலர் ஒடுக்கப்பட்ட வாழ்க்கையில் இருந்து விடுதலை அடையும் படியாக உண்மையான மனதுடன் வந்தார்கள். (மத்தேயு 15:30). இயேசுவை உண்மை மனதுடன் தேடி வந்தவர்கள் மட்டுமே தங்கள் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுதலை அடைந்தார்கள். எனவே சபையிலும் சில அவிசுவாசிகளும், ஆங்காங்கே சில கள்ளப் போதகர்களும் இருக்கலாம். நாற்றுக்களுக்கு மத்தியிலே பொல்லாங்கன் களைகளை விதைப்பது போல, சபையிலும் சில களைகள் விதைக்கப்பட்டிருக்கலாம். அதனால், சபை வேண்டாம், மேய்ப்பன் வேண்டாம் என்று தனித்து நின்று பிசாசானவனுடன் யுத்தம் செய்வோம் என்று துணிகரம் கொள்ளாதிருங்கள். ஆண்டவராகிய இயேசு சபையை நமக்கு ஈவாக கொடுத்திருக்கின்றார்.

கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார் க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம். இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற் கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது (1 சாமுவேல் 15:22). எனவே பொறுமையோடு சபை அதிகாரங்களுக்கு கீழ்ப்படிந்திருங்கள். கர்த்தர் யாவற்றையும் அறிந்திருக் கின்றார்.

சபை ஐக்கியத்தினால் உண்டாகும் பலன்களில் சிலவற்றைப் பார்ப்போம்.

பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். (எபேசியர் 4:12-15)

மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து, சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம் நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும். (எபிரெயர் 10:24-25)

மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். (எபேசியர் 4:2,3)

மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள். (1 தெச 5:14)

முன்பு நாங்கள் கீழ்படியாமையின் பிள்ளைகளாகவும், கோபாக்கினையின் பிள்ளைகளாகவும் இருந்தோம். பிதாவாகிய தேவன் தாமே தமது மிகுந்த கிருபையினாலே நம்மை தம்முடைய ராஜ்யத்தின் பிள்ளைகளாக மாற்றியிருக்கின்றார். அவருடைய ராஜ்யத்திற்குட்பட்டவர்கள் தேவனுடைய ஒழுங்கிற்கு கீழ்ப்படிகின்றவர்களாக இருக்கின்றார்கள். கண்கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராதவன் கண்காணாத தேவனில் எப்படி அன்புகூருவான்? அது போல கண்கண்ட அதிகாரங்களுக்கு கீழ்படியாதவன், கண்காணாத அதிகாரத்திற்கு எப்படி கீழ்ப்படிவான்? தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிகின்றவனே அவரில் அன்பாயிருக்கின்றான்

பிரியமானவர்களே, தேவனாகிய கர்த்தருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். அவருக்கு மேற்பட்ட அதிகாரங்கள் இல்லை. அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. அவருடைய நீதியே நித்திய நீதி. அவரே நீதியுள்ள நியாயாதிபதி. எனவே பொறுமையோடு தேவ சித்தத்தை உங்கள் வாழ்வில் நிறைவேற்றுங்கள். கர்த்தர் வருகின்றார்!

அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு பலன் அளிக்கும் கர்த்தர் உங்களை சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக. **ஆமேன்**!

# உங்களுக்கு சமாதானம்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வாசகம் - யோவான் 20:19

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் தங்களுக்குண்டான எல்லாவற்றையும் விட்டு, அவரை பின்பற்றிச் சென்றார்கள். ஒருவேளை அந்நாட்களிலே, இருந்த அவர்களது உறவினர்கள், நண்பர்கள் அவர்களை பார்த்து நகைத்திருக்கலாம். ஆனால், சீஷர்களோ, பல சவால்கள் எதிரப்புக்கள் மத்தியிலும் இயேசுவின் பின் சென்றார்கள். இயேசு கிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்த நோக்கம் நிறைவேறும் வேளை வந்தபோது, யூத மத அதிகாரிகள் அவரை பிடித்து, பல பாடுகளுக்கு உட்படுத்தி, சிலுவையிலே அறைந்தார்கள். நடப்பது என்ன என்பதை அறிந்து கொள்ள முடியாமல், சீஷர்களின் மனதிலே பயம் ஏற்பட்டிருந்தது. அதனால், கதவை பூட்டிக் கொண்டு உள்ளே ஒளித்திருந்தார்கள். தங்களுக்குண்டான யாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவை பின்பற்றிய அவர்கள் இப்போது சுதந்திரமாக வெளியே நடமாட முடியாதபடி திகில் அவர்களை ஆட்கொண்டிருந்தது.

யூத மத அதிகாரிகளுக்கும், அவர்களை சார்ந்த ஜனங்களுக்கும் தாங்கள் நினைத்ததை நிறைவேற்றிவிட்டோம் என்ற மனதிருப்தி அவர்களது உள்ளங்களிலிருந்திருக்கலாம். மூன்றாம் நாளிலே சிலர், சீஷரிடம் வந்து, அவருடைய சரீரத்தைக் காணவில்லை, அவர் உயிர்தெழுந்துவிட்டார் என்று கூறினார்கள். ஆனாலும் தற்போது அவர்கள் மனதிலே இன்னும் குழப்பங்கள் அதிகரித்திருந்தது. ஊரிலுள்ள ஜனங்கள் எல்லாரும் சுதந்திரமாக வெளியிலே திரிந்து கொண்டிருக்கின்ற வேளையிலே, இயேசுவுக்காக எல்லாவற்றையும் விட்டு வந்தவர்கள், வீட்டின் கதவைப் பூட்டிக் கொண்டு உள்ளே பயத்தோடு இருக்கின்றார்கள். அவர்கள் மனதிலே அநேக கேள்விகள். இந்நிலையிலே கர்த்தராகிய இயேசு வீட்டிற்குள்ளே அவர்கள் நடுவே வந்து நின்று. “உங்களுக்கு சமாதானம்” என்று கூறினார்.

நீங்கள்அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார் என்று ஆண்டவராகிய இயேசுவைக் குறித்து தேவ ஊழியராகிய யோவான் ஸ்நானன் கூறினார். ஒருவேளை, இன்று நீங்கள் அவரை அறியாதிருக்கலாம் ஆனால் அவர் உங்கள் நடுவிலே, உங்கள் அருகிலே நிற்கின்றார். அவர் சமாதானக் காரணராகிய கர்த்தராய் இருக்கின்றார். இன்று உங்களுடைய வாழ்க்கையில் எந்த குழப்பங்கள் ஏற்பட்டாலும், சமாதானக் கர்த்தர் உங்கள் நடுவிலே இருக்கின்றார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

மனிதர்கள் பார்க்கின்ற பிரகாரமாக கர்த்தர் பார்ப்பவர் அல்லர். இந்த உலகத்தின் பார்வையிலே, பெரும்பான்மையினராய் இருக்கின்றவர்களுடைய கருத்துக்களே எடுத்துக் கொள்ளப்படுகின்றது. தேசாதிபதியாக இருந்த பிலாத்து, இயேசுவின் மேல் எந்த குற்றத்தையும் காணவி ல்லை அதனால் அவரை விடுதலை செய்யும்படி வகை தேடினான். பிலாத்து

அதிகாரமுள்ளவனாக இருந்தும், அதிகபடியானவர்கள் இயேசுவை சிலுவையில் அறையும்படி கூக்குரலிட்டதால், கலகம் அதிகமா கிறதேய ல்லாமல் தன் பிரயாசத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு,அதிகபடியானோரின் இஷ்டப்படியே இயேசுவை சிலுவையில் அறை யும்படி ஒப்புக்கொடுத்தான். கருப்பொருளாவது, சிறுபான்மையான ஜனங் கள், நீதியின் பக்கம் நின்றாலும் அவர்களின் கருத்துக்கள் ஒருபோதும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இதனால் சில மனிதர்கள் விசாரிப்பாரின்றி தள்ளுண்டு போகின்றார்கள். ஆனால் நம் ஆண்டவராகிய இயேசுவோ மனிதன் பார்க்கின்ற பிரகாரமாக நம்மைப் பார்ப்பவரல்லர். அவர் ஒவ்வொருவரையும் அறிந்திருக்கின்றார். அவர் ஒருவனையும் கைவிடுவதில்லை.

சமாரியா நாட்டைச் சேர்ந்தவர்கள் யூதர்களுக்கு அருவருப்பானவர்களாய் இருந்தார்கள். அந்நாட்களிலே, சமாரியா நாட்டை சேர்ந்த ஸ்திரி யாக் கோபின் கிணற்றில் தண்ணீர் மொள்ள வந்தாள். அவளுடைய வாழ் க்கை மிகவும் நெறிமுறையற்றதாக இருந்தது. அப்படிப்பட்ட ஸ்திரியோடு எவருமே பேசுவதற்கு விரும்ப மாட்டார்கள். ஆனால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, அவளோடு பேசி, அவளுடைய தவறான வாழ்க்கையை அவளு க்கு உணர்த்தி, அவளுக்கு தேவ காரியங்களை வெளிப்படுத்தி னார். இதனால் அவளுடைய வாழ்க்கையிலே தேவ சமாதானம் உண்டாயிற்று.

யூதருடைய பண்டிகையின் நாட்களிலே திரளான ஜனங்கள் எருசலே முக்கு செல்லுவது வழக்கம். அப்பொழுது இயேசுவும் எருசலேமுக்குப் போனார். அங்கே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளத்தினருகே அநேக வியாதிக்காரர் படுத்திருந்து, தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக்கொண்டிருப்பார்கள். ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீ ரைக் கலக்குவான் தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதிஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான். அநேகமாயிரம் ஜனங்கள் இருந்தபோதும், நம் கர்த்தராகிய இயேசு அந்த குளத்தினருகே உதவி யற்று படுத்திருந்த ஒரு மனிதனை தேடிச் சென்றார். அவன் முப்பத்தெட்டு வருஷம் வியாதியாயிருந்தான். அவன் வெகுகாலமாய் வியாதிஸ்தனெ ன்று இயேசு அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார். அதற்கு வியாதிஸ்தன்: ஆண்டவரே, தண் ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறத ற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான். இயேசு அவனை நோக்கி: எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். உடனே அந்த மனு ஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோ னான். அவனுடைய வாழ்க்கையிலே பெரிதான சமாதானம் உண்டாயிற்று.

உயிர்ந்தெழுந்த மீட்பராகிய இயேசு, இன்று உங்கள் வாழ்விலும் சமா தானத்தை தர சித்தமுள்ளவராக இருக்கின்றார். அவரை கிட்டிச் சேரு ங்கள். அவரிடத்திலே விசுவாசமாயிருங்கள். அவருடைய சமாதானம் உங்கள் இருதயங்களை ஆட்கொள்வதாக.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்
இணையத் தளத்தில் (INTERNET WEBSITE இல்)
தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம். https://gtachurch.ca/im]

# மனத்தாழ்மை

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக, பஸ்கா பண்டிகைக்கு முதல்நாள், இராத்திரியிலே, தம்முடைய சீஷர்களோடுகூட இயேசு போஜனம் பண்ணுகையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள். இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றார். கர்த்தராகிய இயேசு தாம் மறுபடியும் வருமளவும், இதை அவருடைய நினைவாக செய்யும்படிக்கு திருவிருந்தை ஏற்படுத்தினார். இந்த திருவிருந்தை ஏற்படுத்தினவரைப் போல நாம் மாற வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாக இருக்கின்றது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே, போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். பின்பு அவர் கூறுகையில், நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக் கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் என்றார். கருப்பொருளாவது, தாழ்மையில்லாமல் ஒருவனும் தேவனுக்கு பிரியமாக இருக்க முடியாது. மனத் தாழ்மையில்லாதவன் கிறிஸ்துவை உடையவன் அல்ல. உங்கள் மனத்தாழ்மையினால் உங்களுக்கு எதிராக குற்றம் செய்பவர்களை மன்னியுங்கள். நீங்கள் செய்த குற்றங்களுக்காக மற்றவர்களிடமிருந்து மனத்தாழ்மையோடு மன்னிப்பைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

**யோவான் 13:15**

**நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.**

**ஜெபம்**: தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கின்ற தேவனே, நான் மேட்டிமையான சிந்தைகளை களைந்து விட்டு, ஏக சிந்தையுள்ளவனா(ளா)ய், இயேசுவைப் போல வாழ வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீடிய பொறுமையுள்ளவர்களாயிருங்கள்

இஸ்ரவேலின் ராஜாவாகும்படிக்கு முன்குறிக்கப்பட்ட மனிதனாகிய தாவீதுக்கு பல துன்பங்கள் ஏற்பட்டது. அவன் அந்நியனும் பரதேசியுமாக குகைகளிலும், மலைகளிலும், வனாந்திரங்களிலும், அந்நிய தேசங்களிலும் சஞ்சரித்து வந்தான். அவனுடைய சத்துருக்கள் அவனைப் பார்த்து உன் தேவன் எங்கே என்று நாள்தோறும் நிந்தித்து வந்தார்கள். அந்த அனுபவம் அவனுக்கு தன் எலும்புகளை உருவக்குத்துகிறதுபோல் இருந்தது. நம்முடைய ஆண்டவராகிய இயேசு, சிலுவையிலே அறையப்பட்டிருந்தபோது, அந்த வழியாய் நடந்து போகின்றவர்களும், யூத மார்க்கத்தின் பிரதான ஆசாரியரும், வேத வல்லுனர்களும், மூப்பர்களும் அவரை நிந்தித்து பரிகாசம் செய்தார்கள். தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள் நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்றும், தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக் கையாயிருந்தானே. அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள். நம்முடைய வாழ்க்கையிலும் மற்றய மனிதர்களுக்கு ஏற்ப்படுவதுபோலவே துன்பங்கள் ஏற்பட்டாலும், சில மனிதர்கள், நமக்கு துன்பங்கள் ஏற்படும்வரைக்கும் காத்திருந்தவர்கள் போல, துரிதமாகவே நம்மை நிந்தித்து ஏளனம் செய்கின்றார்கள். ஆனால், நாமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுவைப் போல, மற்றவர்கள் கூறும் வசைச் சொற்களை தியானம் செய்யாமல், பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதையே தியானமாக கொண்டிருக்க வேண்டும். நம்முடைய வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவருடைய சித்தம் நிறைவேற காத்திருக்க வேண்டும். நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். பிரியமானவர்களே, இன்று நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் சிலுவை மரணத்தை நாம் தியானிக்கின்ற வேளையிலே, திவ்விய சுபாவமாகிய நீடிய பொறுமையைநாம் கற்றுக் கொள்ளவேண்டும். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. நம்முடைய வாழ்விலும் காரணமின்றி மற்றவர்கள் நம்மை பகைக்கும் போது, கிறிஸ்துவிலிருந்த நீடிய பொறுமையானது, கிரியைகள் வழியாக எம்மில் வெளிப்பட வேண்டும்.

**யோவான் 6:38**

**என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்**

**ஜெபம்:** என்னை பெயர்சொல்லி அழைத்த தேவனே, என் வாழ்விலே, உண்டாகின்ற உயர்விலும் தாழ்விலும் உம்முடைய திருச்சித்தத்தை நிறைவேற்றும்படிக்கு பொறுமையோடு முன்னேறிச் செல்ல கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சந்தேகங்கள் எழும்புகிறதென்ன?

கர்த்தருடைய பணிக்காக எத்தனை வருடங்களாக இளைப்பின்றி ஓடினேன், இந்த உலகத்திலுள்ளவைகளை அனுபவிக்காமல் இரவும் பகலும் பிரயாசப்பட்டேன், பல தியாகங்கள் செய்தேன், எத்தனையோ அவமானங்களையும் நிந்தைகளையும் சகித்தேன் ஆனால் இன்று என்னுடைய நிலை இப்படியாக போய்விட்டதே, என்னுடைய பிரயாசங்கள் எல்லாம் கணக்கின்றி போய் விட்டதே, கர்த்தர் என்னை கைவிட்டாரோ என்று ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கங்களால் மிகவும் ஒடுங்கிப் போய், தனக்குள்ளே குழப்பமடைந்திருந்தான். அந்த மனிதனுடைய மனதில் மட்டுமல்ல, நம்முடைய வாழ்க்கையிலும், இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுவதுண்டு. பிரதான ஆசாரியர்களும், மூப்பர்களும் ஆண்டவராகிய இயேசுவை பிடிக்கும்படியாய் வந்த போது, அவரோடு இருந்த சீஷர்கள் எல்லாரும் அவரைவிட்டு சிதறி ஓடிப்போனார்கள். அவர்களிடம் இந்த உலகத்திற்குரிய சொத்துக்கள் அதிகமாக இல்லாதிருந்தாலும், தங்களுக்கு உண்டான எல்லாவற்றையும் விட்டு இயேசுவை பின்பற்றி சென்றார்கள். ஆனால் இப்போது, யூத மத அதிகாரிகளுக்கு பயந்து, கதவைப் பூட்டிக் கொண்டு, தனித்துவிடப்பட்டார்கள். இயேசு இஸ்ரவேலைமீட்டுரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். ஆனால் பிரதான ஆசாரியரும் அதிகாரிகளும் அவரை மரண ஆக்கினைக்குட்படுத்தி, சிலுவையில் அறைந்தார்கள் என்று துக்கமுகமுள்ளவர்களாய் இருந்தார்கள். வாழ்க்கையில் எல்லாம் முடிந்து விட்டது போன்ற ஒரு நிலை. இந்நிலையிலே, இயேசு தாமே அவர்கள் நடுவிலே நின்று: உங்களுக்குச் சமாதானம், நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள் உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? என்று கேட்டார். ஆம் பிரியமானவர்களே, இப்படியாகவே ஒரு சமயம் தேவனுடைய ஜனங்களும் கர்த்தர் எங்களை கைவிட்டார், ஆண்டவர் எங்களை மறந்தார் என்று சொல்லிக் கொண்டார்கள். அதற்கு கர்த்தர்: ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை என்று அவர்களுக்கு கூறினார். எனவே, வாழ்க்கையில் ஏற்படும் சூழ்நிலைகளைக் கண்டு சோர்ந்து போய்விடாதிருங்கள். நாம் சேவிக்கும் நம்முடைய கர்த்தர் மரணத்தை ஜெயித்தவர். அவர் ஒரு போதும் தம்முடையவர்களை கைவிடுவதில்லை. விசுவாசத்திலே நிலைத்திருங்கள். சமாதானம் தரும் கர்த்தர்தாமே சதாகாலங்களிலும் நம்மோடு இருக்கின்றவராய் இருக்கின்றார்.

**வெளிப்படுத்தல் 1:18**

**மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்**

**ஜெபம்**: உம்முடைய உள்ளங்கைகளில் என்னை வரைந்திருக்கிற தேவனே, எந்த சூழ்நிலையும் உம்முடைய அன்பைவிட்டு என்னை பிரிக்காதென்பதை உணர்ந்து விசுவாசத்தில் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இரட்சிப்பின் கெம்பீரசத்தம்

ஒரு மனிதனானவன், தன் வாழ்வில் ஏற்பட்ட பின்னடைவுகளைக் குறித்து பல நாட்களாக துக்கித்துக் கொண்டிருந்தான். எப்போதும் துக்க முகத் தோடே அவன் காணப்பட்டான். அதைக் கண்ட அவனுடைய பாட்டனார் அவனை அழைத்து. தம்பி: உன் வாழ்க்கையிலே நீ எதை கொண்டாடு கின்றாயோ, அதுவே உன் வாழ்க்கையில் வளரும். எனவே, தோல்வி ஏற்பட்டது உண்மை, ஆனால் அதையே நாள்தோறும் உன் உள்ளத்தில் தியானித்து துக்கிப்பாயானால், அந்த தோல்வி உன் வாழ்க்கையில் வளர்ந்து அது உன்னை மேற்கொள்ளும். எனவே, வாழ்வில் ஏற்பட்ட பின்னடைவுகளினால் உண்டான படிப்பினைகளை எடுத்துக் கொள். ஆனால் பின்னடைவுகளை விட் டுவிடு என்று அவனுக்கு புத்திமதி கூறி னார்.தேவனுடைய தாசனாகிய மோசே, தேவனுடைய ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, செழிப்புள்ள கானான் தேசத்திற்கு வழிநடத்திச் செல்லும் வேளையிலே, கர்த்தர் கூறியபடி மோவாப் தேசத்திலுள்ள மலையிலே அவன் மரித்துப் போனான்.தேவனுடைய ஜனங்கள் முப்பது நாள் மோசேக்காக அழுது துக்கங்கொண்டாடினார்கள். ஆனால் அவர்கள் அங்கேயே தரித்து நிற்க வில்லை. அவர்கள் தாபரிக்கும் ஊருக்கு தங்கள் பயணத்தை தொடர்ந் தார்கள். பிரியமானவர்களே, நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேக யிருக்கும் ஆனாலும் அவன் நங்கூரம் தன்னை இரட்சித்த இயேசுவில் இருப்பதால் அவன் தளரந்து போவதில்லை. அவன் தன் துக்கத்திலே நிலை கொண்டிருப்பதில்லை மாறாக அவன் கர்த்தர்மேல் பெலன் கொள்ளுகிறவனானதால், அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக்கொள்ளுகின்றான். அவன் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான். எனவே தேவ சமாதானம் உங்கள் இருதய ங்களை ஆண்டு கொள்ளும்படிக்கு, நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்ப டாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத் திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள் ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைக ளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைக ளெவைகளோ,புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். இரட்சிப்பின் தேவன் நம்மோடிருக்கின்றார்.

**சங்கீதம் 118:15**

**நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு; கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்.**

**ஜெபம்**: என் பெலனான கர்த்தாவே, என் வாழ்வில் ஏற்படும் பின்னடைவுகளை நான் தியானம் செய்யாமல், உம்முடைய வேதத்திலே இரவும் பகலும் தியானமாக இருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# குடியுரிமை

நீதியின் பாதையிலே நடப்பவர்கள் தங்கள் சொந்த தேசத்தில் நடைபெறும் எல்லா காரியங்களிலும் பிரியமாக இருக்க மாட்டார்கள். அநீதியான சம்பவங்கள் ஆங்காங்கே நடைபெறும் போது அவைகளினாலே மனவேதனை அடைகின்றார்கள். அதனால் அவர்கள் தங்கள் தேசத்தின்குடியுரிமையை விட்டுவிடுவதில்லை. இந்தப் பூமியிலே, சில மனிதர்கள், பல காரணங்களுக்காக தங்கள் தேசத்தை விட்டு வேறு தேசங்களுக்கு இடம்பெயர்கின்றார்கள். அந்நிய தேசங்களிலே குடியுரிமையை பெற்ற பின்பு, அங்கேயும் தேவ நீதிக்கு எதிரான காரியங்கள் நடப்பதை காண்கின்றார்கள். கருப்பொருளாவது, மனிதர்கள் தாங்கள் உயிர்வாழும் தேசத்தின் குடியுரிமையை எல்லா விதத்திலும் பாதுகாத்துக் கொள்கின்றார்கள். நாம் நாடுகின்ற பரலோகம் பாவ சாபம் இல்லாத நாடு. சஞ்சலமும் தவிப்பும் அங்கே இல்லை. நித்திய சமாதானமுள்ள இன்ப நாடு. நீதியுள்ள கர்த்தர் ஆளுகை செய்யும் நாடு. நாமோ அந்த அழிவில்லாத பரம தேசத்தின் குடிமக்களாக அழைப்பைப் பெற் றிருக்கின்றோம். நம்முடைய குடியிருப்பு இந்தப் பூமிக்குரியதல்ல, அது பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அழிவுள்ள இந்த பூமியிலே, வாழும் மனிதர்கள் தாங்கள் தேசத்தின் குடியுரிமைகளை குறித்து மேன்மை பாராட்டுகின்றார்கள். ஒரு வேளை தாங்கள் வாழும் தேசத்தின் சூழ்நிலைகள் தங்களுக்கு சாதகமாக இல்லாதிருந்தால், அவர்கள் தங்கள் தாய் நாட்டைவிட்டு வேறு ஒரு நாட்டிற்கு சென்றுவிடலாம். ஆனால், ஒரு மனிதனானவன், பரம தேசமாகிய பரலோகத்தின் குடியுரிமையை இழந்து போனால் அவனுடைய நிலைமை என்னவாக முடியும்? இறுதி நாளிலே, பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். தற்காலத்திலே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் வரும் பாடுகளை சகித்து, அவரில் நிலைத்திருந்து, கனி கொடுத்து, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகின்றவர்கள் தங்கள் பரலோக குடியுரிமையை முழுவதுமாக காத்துக் கொள்வார்கள். எனவே நாம் காணாததை நம்பினோமாகில், இவ்வுலகிலே ஏற்படும் பாடுகளை கண்டு பின்வாங்கிப் போய்விடாதபடிக்கு ஆண்டவர் இயேசுவின் வருகைக்காக பொறுமையோடே காத்திருப்போம்.

**பிலிப்பியர் 3:20**

நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது

**ஜெபம்**: நித்திய வாழ்விற்கென்று நம்மை வேறு பிரித்த தேவனே, இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், பரம தேசத்திற்கு ஏற்ற நற்கனிகளை கொடுக்கும் வாழ்வு வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவின் ஆவி உங்களில்

உப்பில்லா பண்டம் குப்பையிலே என்று முன்னோர்கள் கூறிக் கொண்டது போல, உலகமெங்கும் உணவுப் பண்டங்களிலே உப்பை சேர்த்துக் கொள்வது மனிதர்களுடைய வழக்கமாக இருந்து வருகின்றது. துன்மா ர்க்கமான வாழ்க்கை வாழும் மனிதர்களாக இருந்தாலும், சன்மார்க்கமான வாழ்கை வாழும் மனிதர்களாக இருந்தாலும், கடவுள் நம்பிக்கையுள் ளவர்களாக இருந்தாலும், கடவுள் நம்பிக்கையற்றவர்களாக இருந்தா லும், எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ப வர்களாக இருந்தாலும், அவர்கள் கடைக்குச் சென்று உப்பை வாங்கி வரும்போது, உப்பானது, மனிதர்களு டைய வாழ்க்கை முறையை வைத்து அது அதனுடைய சாரத்தை மாற்றிக் கொள்வதில்லை. அதாவது, நல்லவனுக்கு அது நல்லது போலவும், கெட் டவனுக்கு அது கெட்டது போலவும் அதன் தன்மையை மாற்றிவிடுவதி ல்லை. நீங்கள் பூமிக்கு உப்பாக இருக்கின்றீர்கள் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். இயேசுவின் நாமத்திலே நாம் பெற்றுக் கொண்ட பரிசுத்த ஆவியினாலே நாம் சாரமாக்கப்பட்டிருக்கின்றோம். உப்பு அதன் சாரத்தை இழந்து போனால் அது என்னத்திற்கு உதவும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. இன்று சில தேவனுடைய அழை ப்பை பெற்ற மனிதர்கள், தங்கள் பழைய நண்பர்கள் முன்னிலையிலே ஒரு வேஷமும், தங்கள் உறவினர் மத்தியிலே வேறு ஒரு வேஷமும், சபை ஐக்கியத்திலே இன்னுமொரு வேஷமுமாக, இடத்திற்கு தக்கதாக தங்கள் சுபாவங்களை மாற்றிக் கொள்ளுகின்றார்கள். ஞானமாக நடக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்வார்கள். இப்படிப்பட்ட ஞானமானது தேவனிடத்திலிருந்து உண்டானது அல்ல. தேவனிடத்திலிருந்து உண்டான ஞானத்தில் தேவனுக்கு பயப்படும் பயம் இருக்கும். எந்த சூழ்நிலை யிலும் உப்பானது, தனது தன்மையை எப்படி மாற்றாமல் இருக்கின்ற தோ, அதே போலவே எல்லா மனிதர்களின் முன்னிலையிலும் ஒவ் வொரு கிறிஸ்தவனின் வாழ்விலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வின் சாயல் வெளிப்பட வேண்டும். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்கு ட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடை யவனல்ல. பிரியமானவர்களே, எல்லா மனிதர்கள் முன்னிலையிலும் உங் கள் மனத்தாழ்மையையும், பரிசுத்தத்தையும், தெய்வீக அன்பையும் வெ ளிக் காட்டுங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.

**மத்தேயு 5:13**

நீங்கள் பூமிக்கு உப்பாயிரு க்கிறீர்கள்

**ஜெபம்:** பரிசுத்த வாழ்வு வாழும்படி என்னை வேறுபிரித்த தேவனே, எல்லா மனிதர்களுக்கும் முன்பாக நான் உம்முடைய பிள்ளை என்ற சாட்சியை காத்துக் கொள்ளும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்

ஒரு ஊரிலே வசித்து வந்த ஒரு இளைஞன், அவ்வப்போது தன் நண்பர்களோடு ஒன்று சேர்ந்து கிரிகெட் விளையாடுவது வழக்கமாக இருந்தது. ஒரு நாள், இவர்கள் யாவருமாக ஒன்று சேர்ந்து, அருகிலிருந்த ஒரு வீட்டின் பின்புற வேலியைத் தாண்டி, அந்த வீட்டு சொந்தக்காரரின் உத்தரவின்றி அங்கிருந்த மரத்தில் ஏறி சில மாங்காய்களை பறித்துக் கொண்டு சென்று விட்டார்கள். மாலையில் வீடு திரும்பிய இளைஞனை அவனுடைய தகப்பனார் அழைத்து, அவனை கண்டித்து சில தண்டனைகளை வழங்கினார். அப்பா, நான் அல்ல என் நண்பர்களே முதலில் சென்றார்கள், அவர்களோடு நானும் இருந்தேன் என்று அந்த இளைஞன் தன் தகப்பனானவரிடம் கூறினான். அதற்கு தகப்பனானவர் அவர்கள் அல்ல, நீயே என்னுடைய குமாரன். நீ நன்மையை கண்டடையும்படி உன்னை நெறிப்படுத்துவது என்னுடைய பொறுப்பு என்று கூறினார். அவன் தண்டனையை பெற்றுக் கொண்டான் என்று கேள்விப்பட்ட மற்றய கூட்டாளிகள் அவனைப் பரிகாசம் பண்ணி சிரித்தார்கள். பிரியமானவர்களே, இன்றைய தியானத்திலே இரண்டு காரியங்களை உங்கள் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளுங்கள். முதலாவதாக: கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்து போய்விடாதிருங்கள். இரண்டாவதாக: நீங்கள் கர்த்தருடைய சிட்சைக்கு உள்ளாகும் போது, மற்றவர்களுக்கு அது நகைப்புக்குரியதாக இருக்கும். இவர்கள் கர்த்தரை நம்பியிருந்தார்களே! என்று ஏளனம் செய்வார்கள். “அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகுஅதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா?அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள் இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும் ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்” என்று பரிசுத்த வேதாகம் கூறுகின்றது.

**எபிரெயர் 12:6**

**கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்**

**ஜெபம்**: அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியை எனக்குத் தந்த தேவனே, உம்முடைய சிட்சையை அற்பமாக எண்ணாமலும், சோர்ந்து போகாமலும் இருக்க என்னை பெலப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| வியாழன் \| சித்திரை 8 | 📖 மாலை வாசகம் – யோவான் 15:1 – 6 |
|---|---|

# ஒருவரோடொருவரின் ஐக்கியம்

ஒரு சிறிய ஊரிலே, மொத்தமாக ஐம்பது குடும்பங்கள் வசித்து வந்தார்கள். அவர்களில் அதிகப்படியானோர், அரச சட்டப்படி, தங்கள் வீடுகளுக்கு மின்சார இணைப்பை முறைப்படி பெற்றிருந்தார்கள். இவர்களுடைய வீடுகள் யாவும், தனித்தனியே, அந்த ஊரின் மின்சார வாரிய தொகுதியுடன் நேரடியாக இணைக்கப்பட்டிருந்தது. ஆனால் அதே ஊரில் பக்கம்பக்கமாக இருந்த ஐந்து வீடுகளில் வாழ்ந்து வந்த நண்பர்கள், ஒரு குறிப்பிட்ட வீட்டிற்கு மட்டுமே ஊரின் மின்சார வாரிய இணைப்பின் தொகுதியுடன் இணைப்பை பெற்றிருந்தார்கள். மற்றய நான்கு வீடுகளும் ஊரின் மின்சார வாரிய தொகுதியுடன் இணைக்கப்பட்டிராமல், அந்த ஒரு குறிப்பிட்ட வீட்டுடன் தங்கள் வீட்டின் மின்சார தொகுதியை இணைத்துக் கொண்டார்கள். இரவு நேரங்களிலே, பார்ப்பவர்களுக்கு, அந்த ஊரிலுள்ள எல்லா வீட்டிலும் வெளிச்சம் இருந்தது. ஆனால் எப்போதெல்லாம், அந்த குறிப்பிட்ட ஒரு வீட்டில் மின்சாரக் கோளாறு ஏற்பட்டதோ, அந்த வேளைகளிளெல்லாம், மற்றய நாலு வீடுகளிலும் இருள் சூழ்ந்து கொண்டது. ஏனெனில் அந்த நாலு வீடுகளின் வெளிச்சமும், அந்த ஐந்தாவது வீட்டின் மின்சார இணைப்பில் தங்கி இருந்தது. பிரியமான சகோதர சகோதரிகளே, பரலோக யாத்திரிகளாக இந்த பூவுலகிலே வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களுடைய இணைப்பு யாரில் தங்கியிருக்கின்றது? ஆண்டவராகிய இயேசுவுடன் நேரடியாக இணைக்கப்பட்டிருக்கின்றீர்களா அல்லது சிறு குழுவாக கிறிஸ்துவை பின்பற்றும் ஒரு குறிப்பிட்ட மனிதனுடன் இணைப்பை வைத்திருக்கின்றீர்களா? நம்முடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்க வேண்டும். தேவன் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம் *(1 யோவான் 1:3,7)*. அதாவது அவர் வழியாகவே நாம் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருக்க முடியும். மாறாக, ஒரு குறிப்பிட்ட மனிதன் வழியாக நாம் தேவனோடு ஐக்கியப்பட்டிருந்தால், அந்த மனிதன் யாராக இருந்தாலும், அவன் வாழ்க்கையிலே பின்னடைவுகள் வரும் போது, அவனோடு இணைக்கப்பட்டிருக்கும் மற்ற மனிதர்களும் பின்மாற்றமடைந்து விடுவார்கள். என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கின்றான் என்று கர்த்தர் கூறியிருக்கின்றார். அவர் வழியாக உண்டாகும் ஐக்கியமே உண்மையான ஐக்கியம்.

**1 யோவான் 1:7**

அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்

**ஜெபம்**: பரலோக தேவனே, உம்முடைய ஜீவ வார்த்தைகளை பற்றிக் கொண்டு உம்முடைய திவ்விய ஒளியிலே நடக்கின்றவர்களாகவும், அவ்வழியாக ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருக்கவும் கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | சித்திரை 9 | 📖 மாலை வாசகம் – 1 பேதுரு 1:23 – 25

# நித்தியமானவைகள் எவை?

மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது. வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான். காற்று அதின்மேல் வீசினவுடனே அது இல்லாமற்போயிற்று; அது இருந்த இடமும் இனி அதை அறியாது என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. ஆனாலும் இந்த உலகிலே மனிதர்கள் தங்கள் மனதிற்கு பிடித்த காரியங்கள் தங்கள் வாழ்க்கையிலே நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள். எடுத்துக்காட்டாக, பதவி, அந்தஸ்து, தங்களுடைய பெயர், உலக சொத்துக்கள், ஆரோக்கியம், உறவுகள், நண்பர்கள் இப்படியாக அவர்கள் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. நிலையற்ற வாழ்விலே நிலையானவைகளை நாடித் தேடுகின்றார்கள். மாறிப் போகும் உலகிலே மாறாதவைகளை வாஞ்சிக்கின்றார்கள். அழிந்து போகும் உலகிலே அழியாதவைகளை பெற்றுக் கொள்ள முடியாது. வானமும், பூமியும் ஒழிந்து போகும். பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம் அவைகள் அழிந்து போகும் ஆதலால் பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் அவை அழிந்து போவதில்லை. என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே பூமியிலே உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நாட்களிலே நித்தியமானவைகளைத் தேடுங்கள். அவைகளையே சேர்த்துக் கொள்ளுங்கள். வரவிருக்கும் நிலையான நகரம் (எபிரெயர் 13:14 ), அசைவில்லாத ராஜ்யம் (எபிரெயர் 12:28, தானியேல் 7:14), நித்தியஜீவன் (ரோமர் 2:7), தேவனுடைய கிருபை (சங்கீதம் 103:17) மாறாத தேவ அன்பு (ரோமர் 8:39), தேவனுடைய பரிசுத்தம் (1 பேதுரு 1:15). தேவனுடைய வார்த்தை (மத்தேயு 24:35). நித்திய இளைப்பாறுல் (எபிரெயர் 4:11). இவைகளையே நாடித் தேடுங்கள். தேவன் ஒருவரே என்றென்றுமுள்ள சதாகாலங்களிலும் இருக்கின்றவராய் இருக்கின்றார் (வெளி 1:18), இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். (எபிரெயர் 13:8). பிரியமான சகோதர சகோதரிகளே, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே, ஆகையால் நித்தியமானவரையும், அவர் கொடுக்கும் நித்தியமானவைகளையும் வாஞ்சித்து நாடுங்கள்.

**வெளிப்படுத்தல் 21:4**

அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார் இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.

**ஜெபம்**: என்றும் மாறாத தேவனே, நான் காணும் உலகமும் அதிலுள்ளவைகளும், மாம்சத்தின் ஆசை இச்சைகளும் ஒழிந்து போகும் என்ற உண்மையை என்றும் உணர்ந்தவனா(ளா)க வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மன நிறைவோடு பணி செய்யுங்கள்

ஒரு ஊரிலே, எளிமையான வாழ்க்கை வாழும் தேவ ஊழியர் தனக்கு கொடுக்கப்பட்ட தேவ பணியை பணிவோடு நடப்பித்து வந்தார். ஆலயத்தின் ஆராதனைகள் யாவும் ஒரு ஓலை கொட்டிலிலே நடை பெற்று வந்தது. அவ்வழியாக கடந்து செல்லும் சில கிராமத்து மக்கள், அந்த கொட்டில் பக்கமாக தங்கள் தலையை திருப்பிக் கொள்ள கூட விரும்புவதில்லை. அவர்கள் ஆண்டவராகிய இயேசுவை அறியாதவர்கள் ஆனால் ஆண்டவர் இயேசுவை அறிந்த சிலரும் கூட, தங்களுக்கும் அந்த சிறிய சபைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது போல நடந்து கொண்டார்கள். இங்கெல்லாம் நம்முடைய நேரத்தை செலவிடுவதில் எந்த பிரயோஜனம் எமக்கு கிடைக்காது என்றும் சிலர் தங்கள் பிள்ளைகளை அங்கு செல்வதற்குகூட அவர்கள் அனுமதிக்காதிருந்தார்கள். ஆனாலும், அந்த சபையிலே, ஊழியருக்கு உதவியாக இருந்த ஒரு வாலிபன், தனக்கு கொடுக்கப்பட்ட சிறிய பொறுப்புக்களை மிகவும் உற்சாகத்துடனும், மனநிறைவோடும் செய்து வந்தான். தான் யார் என்றும், தன்னுடைய சபை இன்னதென்றும், தன் ஊழியர் எவர் என்றும் சொல்லிக் கொள்வதில் அவன் வெட்கம் ஏதும் அடையவில்லை. கண்ணீரோடு விதைக்கின்றவர்கள் கெம்பீரத்தோடு அறுப்பார்கள். அற்பமான ஆரம்பத்தை அசட்டை பண்ணாதே என்ற தேவ வார்த்தைகளில் விசுவாசம் கொண்ட அந்த மினஷரி ஊழியர், சற்றும் சலித்துப் போகாமல், தேவன் தனக்குக் கொடுத்த பணியை ஊக்கத்தோடு செய்து வந்தார். பிரியமானவர்களே, இன்றைய தியானத்தில் நீங்கள் உங்களது கருத்திற்கு எடுக்க வேண்டியவைகள்: 1. தேவனுக்கு சித்தமானால், காலங்கள் கடந்து செல்லும் போது, அந்த ஊழியமானது வளர்ந்து பெருகி, பெரிதான கட்டிடங்கள் கொண்ட ஆலயமாக மாறலாம் அல்லது அந்த ஊழியம் தொடர்ந்து கொட்டிலிலே இருக்கலாம். கட்டிடங்களும் அதிலுள்ளவைகளும் அழிந்து போகும் ஆனால் தேவன் மேல் தன் விசுவாசத்தை வைத்து, அவருடைய சித்தத்தை செய்பவனே பாக்கியம் பெற்றவன். 2. அற்பமான ஆரம்பத்தை அசட்டை பண்ணுகின்ற மற்றவர்கள் மேல் கவனத்தைச் செலுத்தாமல், அந்த வாலிபனைப் போல, உங்களுக்கு கொடுக்கப்பட்ட சிறிய பொறுப்புக்களையும் மகிழ்ச்சியோடு நிறைவேற்றுங்கள். கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்.

**லூக்கா 16:10**

**கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்,**

**ஜெபம்:** உமது திருப்பணிக்காக என்னை அழைத்த தேவனே, நீர் என்னை நம்பிகொடுத்திருக்கும் சிறிய பொறுப்புக்களையும் மனநிறைவோடு நிறைவேற்றி முடிக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விசுவாசித்தவளே பாக்கியவதி

இஸ்ரவேல் தேசத்திலே, கலிலேயா என்னும் நாட்டில் நாசரேத் என்னும் ஒரு சிறிய கிராமம் இருந்தது. கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை! நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாக க்கூடுமா? என்னும் வழக்கச் சொற்கள் அந்நாட்களிலே ஜனங்கள் மத் தியிலே இருந்தது. அந்தக் கிராமத்திலே, மரியாள் என்னும் கன்னிகை இருந்தாள். ஒரு நாள், அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த் தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்தி ரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்ப ட்டவள் என்றான். அற்பமாக எண் ணப்பட்ட நாசரேத்து என்னும் கிரா மத்திலே, எளிமையான வாழ்க்கை வாழும் ஸ்திரீயாகிய அவளிடம் தேவ தூதனை சந்திக்க முன்போ அல்லது சந்தித்த பின்போ, இந்நாட்களிலே ஆசீர்வாதங்கள் என்று பெயர் பெற்றிருக்கும் திரளான ஆஸ்திகளோ, உயர்ந்த கல்வி, உலக அந்தஸ்து எவையும் அவளிடம் இருந்ததில்லை. ஆனால் அவளிடத்திலே மனத்தாழ்மையும், நிபந்தனைகள் இன்றி பிதாவாகிய தேவனுடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக் கொடுக்கும் மனப்பக்குவமும் இருந்தது. "கர்த்தர் தம்முடைய அடிமையின் தாழ் மையை நோக்கிப்பார்த்தார் இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என்று அவள் பாடினாள். பிரிய மானவர்களே, பாக்கியம் பெற்றவர்கள் யார்? ஆசீர்வதிக்கப்பட்டவர் கள் யார்? என்பதை இன்று சற்று சிந்தித்துப் பாருங்கள். தன் வாழ்க் கையில் நடக்க இருக்கும் காரியங்கள் எப்படியாக ஆகும் என்பதையும், தான் செல்ல வேண்டிய பாதை இன்னதென்பதையும் அறியாதிருந்தும், தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து தேவசித்தம் தன்னில் நிறை வேற தன்னை ஒப்புக் கொடுத்த ஒரு நல்ல பாத்திரமாகவும் நம் யாவரு க்கும் ஒரு முன் உதாரணமுள்ள ஸ்திரீயாகவும் திகழ்ந்தாள். அது போ லவே, நம் ஒவ்வொருவருக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட பணி உண்டு. இன்று உங்களிடம் ஆஸ்தியோ, கல்வி, அந்தஸ்தோ இருக்க லாம் அல்லது இல்லாதிருக்கலாம். மனத்தாழ்மையுடன் தேவனுடைய வார்த்தையை நிபந்தனை ஏதுமின்றி விசுவாசித்து, அவருடைய சித்தத் திற்கு தங்களை ஒப்புக் கொடுக்கின்றவர்கள் பாக்கியம் பெற்றவர்க ளாக இருக்கின்றார்கள். அவர்களே கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர் களும் நித்திய ஜீவனை பற்றிக் கொள்கின்றவர்களுமாயிருக்கின்றார்கள்.

**லூக்கா 1:45**

**விசுவாசித்தவளே பாக்கிய வதி, கர்த்தராலே அவளு க்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்.**

**ஜெபம்**: அன்பின் தேவனே, இந்த உலக போக்கின்படி ஆசீர்வாதங்கள் என்று பெயர் பெற்றிருப்பவைகளைத் தேடாமல், உம்முடைய திருச் சித்தத்தை நிறைவேற்றும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | சித்திரை 12

📖 மாலை வாசகம் – ஏசாயா 43:18–21

# உங்கள் காப்புறுதி எங்கே?

மேற்கத்தைய நாடுகளிலே வாழும் மனிதர்களில் சிலர், குழந்தை பிறந்து குறிப்பிட்ட சில நாட்களுக்குள், குழந்தை வளர்ந்து பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கு தேவையான செலவை சந்திக்கும் பொருட்டு, காப்புறுதியை (Insurance) பதிவு செய்து, மாதாந்தம் கட்டுப்பணத்தை செலுத்திக் கொள்கின்றார்கள். இந்த மனப்போக்கானது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகின்றது. அது மட்டுமல்ல, பிள்ளைகள் வளர்ந்து வரும் போது, அவர்கள் எதிர்காலத்தில் கஷ்டப்படக்கூடாது என்ற எண்ணத்துடன், அவர்கள் பிழைத்துக் கொள்வதற்காக பல வழிகளை உண்டுபண்ணி வைக்கின்றார்கள். இவைகளை குறித்து விமர்சிப்பது இன்றைய தியானத்தின் நோக்கமல்ல. மாறாக உங்கள் காப்புறுதி எங்கே இருக்கின்றது? என்பதை இன்று சிந்தித்துப் பாருங்கள். மனிதர்கள் இந்த உலகத்தினால் கொடுக்கப்படும் காப்புறுதிகளில் அதிக நம்பிக்கை வைப்பதினால், தேவனாகிய கர்த்தர்மேல் கொண்ட விசுவாசத்தைவிட்டு வழுவிப் போய்விடுகின்றார்கள். பெருந்தொகையான பிள்ளைகள் உண்பதற்கு ஆகாரமின்றி, உடுப்பதற்குத் தகுந்த ஆடைகளின்றி, தங்குவதற்கு ஏற்ற உறைவிடமின்றி நாள்தோறும் வறுமையினால் வாடுகின்றார்கள். என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைக் குறித்து கவலைப்படாதிருங்கள் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்க, சில மனிதர்களோ தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையில் இருபது ஆண்டுகளுக்கு பின் நடக்கவிருக்கும் காரியங்களைக் குறித்து அதிக கவலையடைகின்றவர்களாக இருக்கின்றார்கள். போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. திட்டமிட்டு வாழ்வதில் தவறில்லை ஆனால் திட்டங்களை வாய்க்கச் செய்யும் கர்த்தரை மறந்து போய்விடாதிருங்கள். சமுத்திரத்திலே வழியையும் வலிய தண்ணீர்களிலே பாதையையும் உண்டாக்கி, தாம் தெரிந்துகொண்ட ஜனத்தின் தாகத்துக்கு வனாந்தரத்திலே தண்ணீர்களையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்கும் சர்வ வல்லமையுள்ள தேவன் பேரில் நம்பிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**சங்கீதம் 62:5**

என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு நான் நம்புகிறது அவராலே வரும்.

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, நீரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர் என்பதை மறந்து உலக போக்கில் போய்விடாதபடிக்கு என்னைக் காத்துக் கொள்ளும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# தேசத்திற்காக ஜெபம் செய்யுங்கள்

இன்றைய நாட்களிலே பல மனிதர்கள் அரசாங்கங்களையும் அதிகாரங்களையும் குறித்து விமர்சிப்பதுண்டு. இது சில மனிதர்களின் பொழுது போக்காக இருக்கின்றது. இந்த பூமியிலுள்ள எந்த ஸ்தாபனங்களானாலும், அதிகாரங்களானாலும், அரசாங்கங்களானாலும் அங்கே சில நிறைவுகளும் சில குறைவுகளும் உண்டு. ஒரு தொழிற்சாலையிலே வேலை செய்யும் தொழிலாளி தன் விருப்பத்திற்கேற்ற ஒரு மேற்பார்வையாளர் இருந்தால் நல்லது என்றுவிரும்புகின்றான். அது போலவே தேசத்தின் குடிகள் தங்களுக்கேற்ற அதிகாரங்களையும் அரசாங்கங்களையும் விரும்புகின்றார்கள். இதனால் மனிதர்கள் இன்று பல குழுக்களாக பிரிந்து விடுகின்றார்கள். இன்று நீங்கள் வேதத்தை தியானிக்கும் போது நீங்கள் எந்தக் குழுவை சேர்ந்தவர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். உலகத்தின் பார்வையிலே நாம் சிறுமையானவர்கள். பெரும் குழுவான மனிதர்கள் மத்தியிலே நாம் ஒரு பொருட்டாக எண்ணப்படுவதில்லை. நாம் அற்பமானவர்கள், எதையும் நம்மால் சாதித்துக் கொள்ள முடியாது என்று சில தேவ பிள்ளைகள் எண்ணிக் கொள்கின்றார்கள். நம்முடைய பெலத்தால் நாம் ஒன்றும் செய்ய முடியாது என்பது உண்மை; ஆனால் நம்மை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய நமக்கு பெலனுண்டு. பராக்கிரமமுள்ள பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், இஸ்ரவேலிலே இருந்து சில தேவ பிள்ளைகளை கைதிகளாக கொண்டு சென்றான். பாபிலோனியரின் பார்வையிலே அற்பமாக எண்ணப்பட்ட அந்த தேவ பிள்ளைகள் வழியாக, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர்தாமே ஆளுகை செய்கின்றவர் என்பதையும், தாமே மெய்யான தேவன் என்பதையும் பாபிலோனின் ராஜாவிற்கு தேவன் வெளிப்படுத்தினார். எப்படியாக அந்த வாலிப பிள்ளைகள் கர்த்தரின் கரத்தில் கருவிகளாக இருந்தார்கள்? அவர்கள் என்னதான் நடந்தாலும் தேவன்மேல் கொண்டுள்ள விசுவாசத்தை விட்டுவிடாதவர்கள். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிகின்றவர்கள். வன்முறைகளை விரும்பாதவர்கள். அந்நிய காரியங்ளால் தங்களை தீட்டுப் படுத்தாதவர்கள். தினமும் தேவனை நோக்கி ஜெபிப்பவர்கள். அப்படியே நீங்களும் தேவனுடைய குழுவைச் சார்ந்தவர்களாக, உங்களைத் தாழ்த்தி, தேசத்திற்காக ஜெபம் செய்யுங்கள்.

**தானியேல் 2:21**

அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர் ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்;

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, அதிகாரங்களையும் ஆளுகைகளையும் குறித்து விமர்சிக்காமல், மனத்தாழ்மையோடு உம்மை நோக்கி தேசத்திற்காக ஜெபிக்கும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

| புதன் \| சித்திரை 14 | 🕮 மாலை வாசகம் – யூதா 1:15 |
|---|---|

# கர்த்தருக்குச் சொந்தமானவைகள்

ஒரு பெரிய தோட்டத்திற்குச் சொந்தக்காரனாயிருந்த மனிதன் ஒருவன், தன் தோட்டத்தை பராமரிக்கும் பொறுப்பை சில மனிதர்களுக்கு கொடுத்துவிட்டு, கொஞ்சக் காலம் தூர தேசத்திற்கு சென்றிருந்தான். அந்த மனிதர்களோ, தங்கள் விருப்பப்படி தோட்டத்தை பல பங்குகளாக்கி, அவரவர் தங்கள் இஷ்டப்படி அதை பராமரித்து வந்தார்கள். காலங்கள் கடந்து சென்றபின்பு, அந்த தோட்டத்தின் சொந்தக்காரர் யார் என்பதை மறந்து, அதைக் குறித்த உணர்வற்றவர்களாக மாறிவிட்டார்கள். சிலர் தங்கள் ஆளுமைகளைக் குறித்து மேன்மைபாராட்டி வந்தார்கள். சிலர் தோட்டத்தின் சொந்தக்காரரை குறித்து ஏளனம் செய்தார்கள். நாட்கள் நிறைவேறிய போது, அந்த தோட்டத்துச் சொந்தக்காரர் வந்து, தன் தோட்டத்தின் நிலையை கண்டு, அவர்கள் யாவரையும் நியாயந்தீர்த்தார். பிரியமானவர்களே, பூமியிலுள்ள அதன் ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்? கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி: அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம் என்கிறார்கள். பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார் ஆண்டவர் அவர்களை இகழுவார். அப்பொழுது அவர் தமது கோபத்திலே அவர்களோடே பேசி, தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப்பண்ணுவார். இப்போதும் ராஜாக்களே, உணர்வடையுங்கள், பூமியின் நியாயாதிபதிகளே, எச்சரிக்கையாயிருங்கள். பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள். குமாரன் கோபங் கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ்செய்யுங்கள் கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும் அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்" என்று கர்த்தருடைய ஆளுகையைக் குறித்து பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. தேவனாகிய கர்த்தர்தாமே இவற்றை அறிந்து கொள்வதற்கு நம்முடையமனக்கண்களை வெளிச்சமாக்கியிருக்கின்றார். கர்த்தராகிய இயேசு மறுபடியும் வரும் நாளிலே, அவர் முன்னினையில் நாம் பாக்கியம் பெற்றவர்களாக காணப்படும் பொருட்டு, தேவன் நம்மிடம் தந்த பொறுப்பை மனத்தாழ்மையோடு நிறைவேற்றுவோமாக.

**சங்கீதம் 24:1**

**பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது.**

**ஜெபம்**: சகலமும் படைத்த தேவனே, ஆயிரமாயிரமான உமது பரிசுத்த வான்களோடுங்கூட நீர் வரும் நாளிலே, உமக்கு முன்பாக பாக்கியம் பெற்றவனா(ளா)க காணப்படும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தருடைய வழியை கைக்கொள்

இந்த தேசத்தின் ராஜா முன்னெடுக்கும் செயற்பாடுகள் இளந்தலை முறையினரின் எதிர்காலத்தை பாதிக்கப் போகின்றது. குடி மக்கள் நெறி முறையற்று போகப் போகின்றார்கள். என்னுடைய பிள்ளைகள் எப்படியாக வாழப் போகின்றார்கள் என்று ஒரு மனிதனானவன் தன் நண்பர்களோடும், உறவினாரோடும் அவ்வப்போது பேசிக் கொள்வான். இப்படிப்பட்ட பேச்சு அவனுடைய வாழ்வில் வழக்கமாயிற்று. அவனுடைய கருத்தின்படி, சிறியவர்களாக இருக்கும் தனது ஐந்து பிள்ளைகள் கெட்டுப்போனால் அதற்கு இந்த ராஜாவே காரணம் என்று இப்போதே நிச்சயித்துக் கொண்டான். ஒரு நாள் அவன் இவ்வண்ணமாக தன் கருத்துக்களை பேசும் போது, அவனுடைய பாட்டனார் அவனை அழைத்து, மகனே, தேசத்தின் ராஜா எத்தனையோ கோடிக்கணக்கான குடி மக்களை ஆளுகை செய்கின்றார். தேசத்தின் தேசாதிபதிகள் இலட்சக்கணக்கானோரை ஆளுகை செய்கின்றார்கள். நகர முதல்வர்கள் ஆயிரக் கணக்கானோரை ஆளுகை செய்கின்றார்கள். முறைப்படி அவர்கள் தங்கள் கணக்கை தேவனிடம் கொடுப்பார்கள். ஆனால், நீயோ உன் வாழ்க்கைக்குரிய கணக்கை கொடுக்க வேண்டும். உன் பிள்ளைகள் உனக்கு கட்டுப்பட்டிருக்கின்றார்கள். பொல்லாதவர்களைக்குறித்து எரிச்சலடையாதே நியாயக்கேடுசெய்கிறவர்கள்மேல் பொறாமைகொள்ளாதே. அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும்பூண்டைப்போல் வாடிப்போவார்கள். கர்த்தரை நம்பி நன்மைசெய் தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள். பிள்ளைகள் நடக்கவேண்டிய வழியிலே அவர்களை நடத்து. அவர்கள் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பார்கள் என்று அவனுக்கு அறிவுரை கூறினார். ஆம்! பிரியமானவர்களே, பொதுவாக மனிதர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் காரியங்களையும், தங்கள் பொறுப்புக்களையும் மறந்து விடுகின்றார்கள். அதனால் வரும் பின்விளைவுகளையும் பாதகங்களையும் மற்றவர்கள் மேல் பழி சுமத்திவிடுகின்றார்கள். நாம் அவ்வண்ணமாக வாழாமல், கர்த்தருடைய வழியிலே நிலைத்திருக்கும் போது, அவர் நம்மேல் கண்ணோக்கமாயிருந்து நம் ஆத்துமாவை காத்து வழி நடத்துவார்.

**சங்கீதம் 37:34**

**நீ கர்த்தருக்குக் காத்திருந்து, அவருடைய வழியைக் கைக்கொள் அப்பொழுது நீ பூமியைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார். துன்மார்க்கர் அறுப்புண்டுபோவதை நீ காண்பாய்.**

**ஜெபம்:** பாதுகாக்கும் தேவனே, நான் என் சுயபுத்தியின்மேல் சாயாமல், என் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உம்முடைய வழிகளிலே நான் நிலைத்திருக்கும்படிக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவின் சாயலில் பெருகுங்கள்

“ஊர்க்குருவி உயரே பறந்தாலும் பருந்து ஆகாது” அதுபோலவே நீ எப்போதுமே சாதாரண தொழிலாளியாகவே இருப்பாய் என்னைப் போல இயக்குனராக வரவே முடியாது. என்னுடைய அந்தஸ்து என்ன! என்னுடைய அனுபவம் என்ன! என்று ஒரு தொழிற்சாலையிலே வேலை பார்த்த இயக்குனர் அங்குள்ள ஒரு தொழிலாளியைப் பார்த்து கூறினார். இப்படியாக இந்த உலகிலே, கல்வி, சமுக அந்தஸ்துக்கள் அடிப்படையில் பல தரா தரங்கள் வகுகப்பட்டுள்ளது. சில இடங்களிலே சிறுமைப்பட்டோர் எவ்வளவு முயற்ச்சி செய்தாலும், அவர்கள் ஒடுக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள். ஊழியன் ஊழியனாகவும் எஜமானன் எஜமானனாகவும் இருப்பான். ஆனால் ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாகிய நம்முடைய எஜமானனாகிய இயேசு இந்த உலகத்தின் போக்கில் மனிதர்களை பார்க்கின்றவர் அல்ல. 1. நாம் யாவரும் தம்மைப் போல மாறும்படிக்கு, அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். 2. நாம் எப்போதும் அவரோடு இருப்பதையே அவர் விரும்புகின்றார். “என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன் ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.” என்று கூறியிருக்கின்றார். 3. அவர் மறுபடியும் வந்து நம்மை தம்முடன் சேர்த்துக் கொள்ளும் வரைக்கும் நம்மோடு என்றென்றைக்கும் இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை நமக்கு தந்தருளினார். எனவே இந்த உலகத்தின் போக்கினால் மனந்தளர்ந்து போகாதபடிக்கு, ஆண்டவர் இயேசுவின் அன்பிலே நிலைத்திருங்கள். இந்த உலகமும் அதன் போக்குகளும் அழிந்து போகும். ஆனால் ஆண்டவராகிய இயேசுவில் நிலைத்திருக்கின்றவர்கள் என்றென்றும் அசையாதிருப்பார்கள்.

**யோவான் 17:22**

**நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.**

**ஜெபம்**: அப்பா பிதாவே என்று கூப்பிடும் புத்திர சுவிகாரத்தை தந்த தேவனே, இந்த உலகத்தின் போக்கினால் நான் சோர்ந்து போகாமல், தேவ சாயலிலே அனுதினமும் வளர கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஸ்தோத்திரம் செலுத்துங்கள்!

ஒரு மாணவனானவன், கணித பாடத்திலே மேலதிக உதவியை பெற்றுக் கொள்ளும்படிக்கு ஊரிலே இருக்கும் ஒரு கணித ஆசிரியரிடம், மாலை நேர வகுப்பிற்கு சென்று வந்தான். சில மாதங்கள் கடந்து சென்ற பின்பு, அந்த ஆசிரியரின் ஒழுக்க நெறிமுறை அவனுக்குப் பிடிக்கவில்லை. என்ன நடந்தது என அவனுடைய பெற்றோர் அவனிடம் கேட்டார்கள். அதற்கு அவன்: ஊரிலே எத்தனையோ கணித ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். இவரில்லாவிட்டால் வேறொருவரிடம் செல்லுவேன். இவர் என்ன எனக்கு சும்மா படிப்பிக்கின்றாரா? சம்பளத்திற்குத் தானே படிப்பிக்கின்றார் என்று பதில் கூறினான். அவனுடைய தகப்பனானவர் அவனை நோக்கி: மகனே, முதல்படியாக, பாடங்களை கற்றுக்கொள்ளுவதற்கு, பாடங்களை சொல்லிக் கொடுக்கும் ஆசிரியரை நீ கனப்படுத்த வேண்டும். அதற்கு மனத்தாழ்மையும் கீழ்ப்படிதலும் இன்றியமையாதது. அந்த மனப்பக்குவம் இல்லாத மாணவர்கள் வாழ்க்கையில் ஒன்றையும் கற்றுக் கொள்ள வேண்டிய பிரகாரம் கற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று அறிவுரை கூறினார். பிரியமானவர்களே, கடைசி நாட்களிலே, மனிதர்களுடைய சுபாவங்கள் எப்படியாக இருக்கும்? அவற்றுள் சில: மனிதர்கள் வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், இணங்காதவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும் இருப்பார்கள். இன்றைய நாட்களிலே சில தேவ பிள்ளைகள்கூட இப்படிப்பட்ட சுபாவமுள்ளவர்களாக மாறிவிடுகின்றார்கள். அந்த மாணவனானவன் கூறியது போல இன்று சிலர், தங்கள் வாழ்விலே பிரயாசப்பட்ட தேவ ஊழியர்களைக் குறித்து பேசிக் கொள்கின்றார்கள். "அவர் ஊதியம் இல்லாமலா பிரயாசப்பட்டார்?, இவர் இல்லாவிடின் இன்னுமொருவரை பார்த்துக் கொள்ளலாம்! இந்த ஊரிலே எத்தனையோ ஆலயங்கள் உண்டு" என்று நன்றியற்ற வார்த்தைகளை துணிகரமாக பேசுகின்றார்கள். நீங்களோ அப்படிப் பேசாமல், உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அன்போடு அவர்களுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள்.

**1 தீமோத்தேயு 2:1**

**எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்**

**ஜெபம்**: அன்பின் தேவனே, எங்களுக்காக பிரயாசப்படுகின்றவர்களுக்காக விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் ஏற்றெடுக்கும் இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இயேசு இல்லாத வாழ்வு

ஒரு சமயம் ஆண்டவராகிய இயேசு ஒரு கிராமத்தில் பிரவேசித்த போது, குஷ்டரோகமுள்ள மனுஷர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று: இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள். அவர்களை அவர் பார்த்து: நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள். அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தினான் அவன் சமாரியனாயிருந்தான். அப்பொழுது இயேசு: சுத்தமானவர்கள் பத்துப்பேர் அல்லவா, மற்ற ஒன்பதுபேர் எங்கே? தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு, இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக்காணோமே என்று சொல்லி, அவனை நோக்கி: நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். இன்றைய நாளிலே விசுவாசம், கீழ்படிவு, நன்றியறிதல், இரட்சிப்பு என்னும் வார்த்தைகளை குறித்து தியானம் செய்யுங்கள். இயேசுவினிடத்தில் வந்த பத்து குஷ்டரோகிகள் அவரிடத்தில் சுகம் பெற்றுக் கொள்ளும்படியாய் வந்தார்கள். தாங்கள் நாடும் ஆரோக்கியம் அவரிடம் உண்டு என்று விசுவாசித்திருந்தார்கள். அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று ஆண்டவர் இயேசு அவர்களுக்கு கூறிய போது, அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து சென்றார்கள். அதன்படி ஆரோக்கியத்தைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால், அதில் ஒன்பது பேருக்கு நன்றியறிதலின் எண்ணம் இல்லாதிருந்தது. அவர்கள் உடல் ஆரோக்கியத்திற்காக இயேசுவிடம் வந்தார்கள், அதை பெற்றவுடன் அப்படியே சென்றுவிட்டார்கள். பிரியமானவர்களே, நீங்கள் ஏன் ஆண்டவர் இயேசுவை நாடித் தேடுகின்றீர்கள் என்பதை ஆராய்ந்து பாருங்கள். இந்த உலக ஆசீர்வாதங்களையும் சரீர சுகத்தையும் பெற்றுக் கொள்வதற்காகவா? இவைகள் ஒருநாள் அழிந்து மண்ணோடு மண்ணாக போய்விடும். நம்முடைய ஆத்துமாவை நித்திய மரணத்திலிருந்து மீட்கும்படியாக இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். இயேசு இல்லாமல் நாம் பரலோகத்திற்கு செல்ல முடியாது. (யோவான் 14:6). எனவே நன்றியுள்ள இருதயத்தோடு, "இயேசுவே நீர் எனக்கு வேண்டும்" என்று அவரையே பற்றிக் கொள்ளுங்கள். ஆன்மீக இரட்சிப்பை பெற்றுக் கொள்ளுங்கள்.

**யோவான் 15:5**

**ஆண்டவர் இயேசு சொன்னார்: என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.**

**ஜெபம்:** அழைத்த தேவனே, அழிந்து போகின்ற இந்த உலக ஆசீர்வாதங்களுக்காக நான் கிரியைகளை நடப்பிக்காகமல் அழியாத நித்திய பரலோக ஆசீர்வாதங்களை நாடித் தேடும்படிக்கு என் மனக் கண்களை பிரகாசமுள்ளதாக்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# திடனற்றவர்களைத் தேற்றுங்கள்

மூன்றாம் வகுப்பில் படிக்கும் தன்னுடைய தங்கை, கணித பாடத்திலே கொடுகக்ப்பட்ட சில கணக்குகளைக் குறித்து மிகவும் குழப்பமடைந்திருந்தாள். பல முறை முயற்ச்சித்தும், சில விடயங்கள் அவளுக்கு நன்றாக புரியவில்லை. அதைக் கண்டு கொண்ட, பத்தாம் வகுப்பு படிக்கும் அவளுடைய அண்ணன், அவளைப் பார்த்து: இந்த சின்னக் கணக்குகள் கூட உனக்கு புரியவில்லையா? இப்படி இருந்தால் அடுத்த வகுப்புக்களில் என்ன செய்யப் போகின்றாய் என்று அவளை கடிந்து கொண்டான். அவர்களுடைய தாயார் அவனை நோக்கி: மகனே, மூன்றாம் வகுப்பு கணக்கை, ஏழு வருடங்களுக்கு பின் நீ திரும்பிப் பார்க்கும் போது உனக்கு அது இலகுவாக இருக்கின்றது. ஆனால் நீ மூன்றாம் வகுப்பு படிக்கும் போது, உன் தங்கச்சியை பார்க்கிலும் கஷ்டப்பட்டாய். அந்தந்த வகுப்புக்குரிய பாடங்கள் அந்ததந்த வகுப்பிலுள்ள மாணவர்களுக்கு கடினமாகத் தோன்றும் என்று பதில் கூறினாள். மேலும் அவள் தன்னுடைய மகளைப் பார்த்து: மகளே, நீ பாலர் வகுப்புக்கு முதன் முறை சென்ற போது, பத்து வரைக்கும் எண்ணுவது உனக்கு எப்படி இருந்தது என்று கேட்டாள். மிகவும் கடினமாக இருந்தது என்று கூறினாள். தாயார்: இப்போது பத்து வரைக்கும் எண்ணுவது எப்படி இருக்கின்றது என கேட்டாள். அதற்கு மகளானவள்: மிகவும் சுலபமாக இருக்கின்றதே என்றாள். அதுபோலே இன்னும் ஒரு வருடத்தில் மூன்றாம் வகுப்பு பாடங்கள் உனக்கு இலகுவாக இருக்கும் என்று அவளை திடப்படுத்தினாள். பிரியமானவர்களே, புதிதாய் பிறந்த குழந்தையை, எழுந்து நட, ஓடு என்று ஒருவரும் கூறுவதில்லை அல்லது பெரியவர்கள் உண்ணும் காரமான உணவு பண்டங்களை உண்ணும்படி குழந்தைகளுக்குத் திணிப்பதில்லை. நாளுக்கு நாள் அவர்கள் வளர்ந்து முதிர்ச்சி நிலையை அடையும் போது, அவைகளை அவர்கள் செய்து கொள்வார்கள். எனவே, பல ஆண்டுகளாக கர்த்தருக்குள் வளர்ந்து தேர்ச்சி பெற்றவர்கள், புதிதாய் தங்கள் விசுவாச வாழ்க்கையை ஆரம்பிப்பவர்களை நீடிய பொறுமையுடனும், அன்போடும், சாந்தத்துடனும் அவர்களை கர்த்தருக்குள் வழி நடத்துங்கள். நீங்கள் இருபது வருடங்களில் வளர்ந்த வளர்ச்சியை ஒரே ஆண்டில் அவர்களிடம் எதிர்பார்க்காதிருங்கள்.

**1 தெச 5:14**

ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்.

**ஜெபம்:** நீடிய பொறுமையுள்ள பரலோக தந்தையே, என் பெலவீன நேரங்களிலே நீர் என்னைத் தாங்கி, ஏந்தி, சுமந்து, தேற்றி வந்தீர் அதுபோலவே நானும் மற்றவர்களை தேற்றி திடப்படத்தும் மனப்பக்குவத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இரக்கமுள்ளவர்களாயிருங்கள்

ஒரு மனிதனானவன், பல ஆண்டுகளாக மீட்பின் நற்செய்தியை கேட்டிருந்தும், அந்த நற்செய்தியையோ அவன் அசட்டை செய்து தன் கல்வி, அந்தஸ்துகளினால் அவனுக்கு உண்டான பெருமையின் கட்டுக்களிலே வாழ்ந்து வந்தான். தனக்கு நற்செய்தியை கூறும்படி வருபவர்களின் ஏழ்மை நிலையை சுட்டிக்காட்டி, அவர்களை பரியாசம் செய்தும் வந்தான். சில ஆண்டுகளுக்குப் பின், அவன் வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கமான சூழ்நிலையில், ஆண்டவராகிய இயேசுவின் அன்பை உணர்ந்து கொண்டான். அவன் மனக்கண்கள் பிரகாசமடைந்தது. உன்னதரின் அன்பை உணராமல், வாழ்க்கையில்பல ஆண்டுகளை வீணடித்து துரோகியாக வாழ்ந்து வந்தேன் என்று மனம் வருந்தி, தன் பாவங்களை ஆண்டவராகிய இயேசுவிடம் அறிக்கையிட்டு, தன் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தான். அவன் இரட்சிப்படைந்த பின்னர். தன் உறவினருக்கும் நண்பர்களுக்கும் தான் கண்டு கொண்ட இயேசுவின் அன்பைக் குறித்து கூறிவந்தான். அவர்கள் அவனை பரியாசம் செய்யும் போது, அவர்களை கடிந்து கொள்ளாமல், “என்மேல் நீடியபொறுமையாக இருந்த ஆண்டவரே, இவர்களுக்கும் இரங்கும்” என்று தன் மனதில் சொல்லிக் கொள்வான். அவர்களின் மனக் கண்கள் திறக்கப்பட வேண்டும் என்று வேண்டிக் கொள்வான். பிரியமானவர்களே, மற்றவர்களுடைய நிலையை அறிந்து கொள்ளும் அறிவில் வளர்வது ஆவிக்குரிய வாழ்வின் ஒரு முக்கியமான பகுதி. அதாவது, மற்றவர்களோடு பேசி, நாம் அறிய அவசியமில்லாத மற்றவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை குறித்த சம்பவங்களையும், இரகசியங்களையும் அறிந்து கொள்வதல்ல. மாறாக, சூழ்நிலைகளினால் நெருக்கப்பட்டு ஒருவன் பெலவீனம் அடைந்திருக்கும் போது, அவனை நியாயந்தீர்க்காமல், எனக்கேற்பட்ட பெலவீனங்களையும் அந்த நேரங்களிலே கர்த்தர் என்மேல் எவ்வளவாக நீடிய பொறுமையுள்ளவராக இருந்தார் என்பதையும் உணர்ந்து, தற்போது பெலவீனப்பட்டிருக்கும் மற்றவர்களுக்காக நீடிய பொறுமையோடு ஜெபிக்க வேண்டும். தவறுகள் குற்றங்கள் நடக்கும் போது அவைகளை நல்மனதோடு சுட்டிக் காட்டுவது நல்லது. ஆனால் நாம் அந்த நிலையிலே இருந்துவந்த நாட்களையும், இனியும் அப்படிப்பட்ட நிலைகள் நம் வாழ்வில் ஏற்படலாம் என்பதையும் மறந்து விடாதிருங்கள்.

**லூக்கா 6:36**

**ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்**

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, என்னுடைய தப்பிதங்களுக்கு தக்கதாக நீர் சரிக்கட்டாமல், உம்முடைய கிருபையினால் என் பாவங்களை மன்னித்தீர். நானும் இரக்கமுள்ளவனா(ளா)க இருக்க உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இடறலடையாதிருங்கள்

யோவான்ஸ்நானன் என்ற தேவ ஊழியர், மீட்பராகிய இயேசுவுக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படி, முன்னோடியாக வந்தார். ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே வாக்களிக்கப்பட்ட மீட்பர் (மெசியா) என்று தேவன்தாமே அவருக்கு சொல்லியிருந்தார். அந்தப்படியே, யோவான்ஸ்நானன், தேவ ஆவி புறாவைப்போல இயேசுவின் மேல் இறங்குவதை நான் கண்டு, இயேசுவே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன் என்றார். அந்நாட்களிலே யூதேயாவை ஆட்சிசெய்த ஏரோது ராஜாவின் நெறிமுறையற்ற வாழ்க்கையை குறித்து யோவான் ஸநானன் கண்டித்திருந்ததால், ஏரோது ராஜா யோவான் ஸநானனை கைது செய்து சிறையிலே வைத்திருந்தான். அத்தருணத்தில் யோவான் ஸநானன் தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து: வாக்களிக்கப்பட்ட மேசியா நீர்தானா? அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமா? என்று இயேசுவினிடத்தில் கேட்கும்படி அனுப்பினான். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள். குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார். பிரியமானவர்களே, சில வேளைகளிலே இப்படிப்பட்ட கேள்விகள் நம்முடைய சிந்தையிலும் அவ்வப்போது தோன்றலாம். மற்றவர்களுடைய வாழ்க்கையின் செழிப்பையும் என் வாழ்க்கையில் நடக்கும் காரியங்களையும் நான் பார்க்கும் போது, நான் இத்தனை வருடங்களாக ஆண்டவராகிய இயேசுவை பின்பற்றினேனே, என் இளமைக் காலத்தையும் வாலிப நாட்களையும் இயேசுவின் நற்செய்திக்காக இழந்து விட்டேனே, எத்தனையோ நெருக்கங்கள் மத்தியிலும் பல தியாகங்களோடு கர்த்தரை சேவித் தேனே, நான் அப்படி செய்தது சரியா அல்லது நான் விருதாவாக அப்படிச் செய்தேனா? என்ற மனப் போராட்டங்கள் உண்டாகலாம். இடறலடைந்து போய்விடாதிருங்கள். இயேசுவை நம்பினோர் பாக்கியம் பெற்றவர்கள். கெம்பீரத்தோடு அறுவடை செய்யும் நாட்கள் சமீபித்திருக்கின்றது. ஏற்ற காலத்தில் அறுவடை செய்வோம்.

**மத்தேயு 11:6**

**என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்.**

**ஜெபம்**: பெலப்படுத்தும் தேவனே, கலப்பையில் கை வைத்தவன் திரும்பிப் பார்க்கக்கூடாது என்ற பிரகாரமாக, இந்த உலகிலே என்ன நடந்தாலும் நான் உம்மிலே உறுதியாய் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விட்டு வந்தவைகள்

கர்த்தர் ஆபிராம் (பின்பு ஆபிரகாம் என்று பெயர் பெற்றவர்) என்ற மனிதனை அழைத்த போது, அவனுக்கு 75 வயதும், அவன் மனைவியாகிய சாராய் (பின்பு சாராள் என்று பெயர் பெற்றவள்) 65 வயதுள்ளவர்களுமாய் இருந்தார்கள். ஆபிரகாமிற்கு கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தமானது, “நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்” என்பதாகும். அந்த வாக்குக் கொடுக்கப்பட்ட சந்ததியானது அவன் மனைவியாகிய சாராய் வழியாக உண்டாகும் என்று உரைக்கப்பட்டது. அன்றைய உலகிலே, ஆபிரகாம் சாராயின் வயதுக்கொத்த தம்பதிகளுக்கு பல பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும்இருந்திருப்பார்கள். ஆனால்,ஆண்டுகள் கடந்து சென்று, ஆபிரகாம் 99 வயதுள்ளவனும், அவன் மனைவியாகிய சாராள் 89 வயதுள்ளவளுமாக இருந்தபோதும் அவர்கள் இருவருக்கும் ஒரு பிள்ளையும் இருந்ததில்லை. ஆனால், ஆபிரகாம் கர்த்தரின்மேலுள்ள விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருந்தான். ஆபிரகாம் மரிக்கும் போது, அவனுக்கு 175 வயதாக இருந்தது. அந்த வேளையிலே, அவனுக்கு சாராள் வழியாக பிறந்த ஈசாக் என்ற ஒரு மகனும், ஈசாக்குக்கு இரண்டு குமாரர்களுமே இருந்தார்கள். இன்று அவர்களுடைய சந்ததி கடற்கரை மணலைப் போல பெருகியிருக்கின்றது. நாமும் கிறிஸ்து வழியாக ஆபிரகாமின்சந்ததியாக்கப்பட்டிருக்கின்றோம். இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை, தங்கள் மாம்ச கண்களால் காணாமல், விசுவாசக்கண்களாலே அவைகளைக் கண்டு, நம்பி அரவணைத்துக் கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள். ஆண்டுகள் கடந்து சென்றாலும், தாங்கள் இந்த பூமியிலே இழந்து போனவைகளையும், தாங்கள்விட்டுவந்தவைகளையும் ஒருபோதும் நினையாதிருந்தார்கள். ஏனெனில் பூமிக்குரியவைகளையல்ல , அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள். பிரியமானவர்களே, விட்டு வந்தவைகளையும், இழந்து போனவைகளையும் சிந்திக்காமல், நாம் நாடித் தேடுகின்ற பரம தேசத்தையும் அதன் மேன்மையையுமே சிந்தித்து அறிக்கையிடுவோமாக.

**எபிரெயர் 11:14**

**இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள்.**

**ஜெபம்**: ஆசீர்வதிக்கும் தேவனே, நீர் சொன்னதை செய்து முடிப்பவர். நீர் செய்ய நினைத்ததை ஒருவரும் தடுக்க முடியாது என்பதை நான் ஒருபோதும் மறந்து விடாதபடி என்னை பெலப்படுத்தி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சேர்த்து வைத்தவைகள் எவை?

பூரண வயதையுடைய ஒரு தகப்பனானவர் வியாதிப்பட்டிருந்தார். பூமியிலே தன்னுடைய வாழ்நாட்கள் முடிவடையும் நாட்கள் சமீபித்திருக்கின்றதென்பதை அறிந்திருந்த அவர், தன்னுடைய வாழ்க்கையை திரும்பிப் பார்த்தார். வாழ்நாள் முழுவதும், உண்மையும் உத்தமமுமாக எளிமையான வீட்டிலேயே வசித்த வந்த அவரிடம், பிள்ளைகளுக்கென விட்டுச் செல்ல இந்த உலக ஆஸ்திகள் ஏதும் இல்லை. "நான் உங்களுக்கென்று எதையுமே சம்பாதித்து வைக்கவில்லை, ஆனால் என்னுடைய நாட்கள் முடிவடையப் போகின்றது" என்று தன்னுடைய பிள்ளைகளிடம் கூறினார். அவருடைய மகள் மறுமொழியாக: அப்பா, நிலையற்ற இந்த உலக ஆஸ்திகள் எங்களிடமில்லை ஆனால் ஒரு நீதிமான் எப்படியாக நிலையான தேவனிலே நிலைத்திருந்து வாழ்வான் என்பதை உங்கள் வாழ்க்கை முறையினால் எங்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கின்றீர்கள். கர்த்தரோடு எங்களை இணைத்திருக்கின்றீர்கள். எனவே நாங்கள் அசைக்கப்படுவதில்லை" என்று கூறினாள். பிரியமானவர்களே, இன்றைய நாளிலே நீங்கள் "சேர்த்து வைத்தவைகள் எவை" என்பதை சிந்தித்துப் பாருங்கள். ஒரு மனிதனானவன் தன்னிடமுள்ள மிகையான பணத்தை தன் எதிர்காலத்திற்கென்று ஒரு நிலையான வங்கிக் கணக்கிலே சேர்த்து வைத்தான். இன்னுமொரு மனிதனானவன், தன்னிடம் மிகையாய் இருந்ததை, இன்றைய நாளிலே வறுமையிலே வாடிடும் வறியவர்களுக்கு கொடுத்தான். வங்கியில் சேர்த்து வைத்தவனின் கணக்கு அந்த வங்கியோடு இருந்தது. ஆனால் ஏழைகளுக்கு வாரியிறைத்தவனின் கணக்கு தேவனோடு இருந்தது. (நீதிமொழிகள் 19:17, சங்கீதம் 112:9). இவைகளைக் குறித்து பலரும் பலவிதமாக விவாதித்துக் கொள்வார்கள். ஆனால் உங்களுடைய இருதயம்இவைகளைக் குறித்து என்ன சொல்கின்றது? உங்களுடைய கணக்கு யாரோடு இருக்கின்றது? வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது. தனக்கென்றும் தன் சந்ததிக்கென்றும் சேர்த்து வைக்கின்றவனின்மேல் யாருடைய கண்கள் நோக்கமாயிருக்கும்? (லூக்கா 12:16-21). இவைகளை ஆராய்ந்து அறிந்து, நிலையானவைகளை நீங்கள் பற்றிக் கொள்ளும்படிக்கு நிலையான தேவனிலே நிலைத்திருங்கள்.

**நீதிமொழிகள் 20:7**

**நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான் அவனுக்குப்பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள்.**

**ஜெபம்:** நித்தியமான தேவனே, இந்த உலக ஆஸ்திகளிலே கண்களை வைத்து, உம்முடைய திவ்விய ஆசீர்வாதங்களை நான் இழந்து போகாதபடிக்கு, உம்மிலே நிலைத்திருக்கும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இல்லாமற்போகும் பொருள்

ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான் அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான் அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந்துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான் நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான் ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான்.பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான் என்று ஆண்டவராகிய இயேசு கூறினார். பிரியமானவர்களே, இந்த சம்பவத்திலே, மூன்று மனிதர்களின் நிலையை குறித்து குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 1. விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஆபிரகாம் என்ற மனிதன் 2. பூமியிலே தரித்திரனாகவும் நோய் கொண்டவனுமாக இருந்த லாசரு 3. சுகபோகமாக பூமியிலே வாழ்ந்த ஐசுவரியவான். ஆபிரகாம் என்னும் மனிதனானவனை, தேவன் அழைத்த போது, அவன் நிபந்தனையேதுமின்றி கீழ்ப்படிந்தான். தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, வாக்குத்தத்தம் நிறைவேறும்படி காத்திருந்தான். லாசரு இந்த பூமியிலே அற்பமாக எண்ணப்பட்டவனும், தீமை அனுபவித்தவனுமாக இருந்தான். ஐசுவரியவான், இந்த பூமியிலுள்ள தேவ ஊழியர்கள் கூறும் சாட்சியை அசட்டை செய்கின்றவனாக இருந்தான் (லூக்கா 16:20). பிரியமானவர்களே, இன்று பல மனிதர்கள் செல்வம், சுகம், பேர், புகழோடு வாழ்வதையே விரும்புகின்றார்கள். ஆனால் மரணம் ஒருநாள் அவர்களை சந்திக்கும் என்பதையும், அதன் பின்பு, நித்திய நித்தியமாக அவர்கள் பரலோகத்திலோ அல்லது பாதாளத்திலோ இருப்போம் என்பதை சிந்திக்க அவர்களுக்கு மனதில்லை. தேவனற்றவர்களாய் திரளான ஐசுவரியத்தோடு வாழ்ந்து, பாதாளத்திலே இறங்குவதைவிட, கர்த்தருக்கு சித்தமானால் இந்த பூமியிலே தரித்திரனாக வாழ்ந்து நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வதே மனிதனுக்கு நல்லது.

**நீதிமொழிகள் 23:5**

இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன்? அது கழுகைப்போல சிறகுகளைத் தனக்கு உண்டுபண்ணிக்கொண்டு, ஆகாய மார்க்கமாய்ப் பறந்துபோம்.

**ஜெபம்**: மேன்மையான அழைப்பை தந்த தேவனே, இந்த உலகத்திலே நான் எந்த நிலையிலிருந்தாலும், நித்திய ஜீவனை இழந்து விடாதபடிக்கு அதை இறுகப் பற்றிக் கொண்டிருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவை உடையவர்கள் யார்?

ஒரு வீட்டிற்கு இரவு உணவிற்காக வந்திருந்த விருந்தாளியொருவர், இந்த தோடம்பழம் (Orange) பார்வைக்கு மிகவும் அழகாக இருக்கின் றதே, ஆனால் இதன் சுவை மரத்திலிருந்து பிடுங்கி சாப்பிடும் தோட ம்பழம் போல இல்லையே என்று தன் நண்பரிடம் கூறினார். நண்பர் மறுமொழியாக: இது இறக்குமதி செய்யப்பட்ட தோடம்பழம், மரத்தி லிருந்து பிடுங்கப்பட்ட நாளிலிருந்து இங்கு வருவதற்கு சுமார் இரண்டு வார ங்கள் ஆகும் என்றும் அதுமட்டுமன்றி அது கெட்டுப்போகாமல் பாதுகாப்ப தற்காக சந்தை முகவர்கள் பல ஏற் பாடுகளை செய்கின்றார்கள். அதனால், அதன் சுவையும், அதன் ஊட்டச் சத் துக்களும் குறைந்து விடுகின்றது என்றும் பதில் கூறினார். பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய நாளிலே கிறிஸ்தவ வாழ்க்கையா னது பார்வைக்கு அழகாய் இருந்தால் போதுமா என்பதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். ஆதிச் திருச்சபையிலே, முதல் முதல் அந்தியோ கியாவிலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷர்களுக்குக் கிறிஸ் தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது. அப்படியாக கிறிஸ்தவர்களாக இருந்தவர்களின் தன்மைகள் என்ன? அவர்களுடைய வாழ்க்கையிலே, உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாச மோசமோ, பட்டயமோ, உயர்வோ, தாழ்வோ இவைகள் எல்லாவற்றின் மத்தியிலும் அவர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சுபாவங் களையே மரண பரியந்தம் தம்முடைய வாழ்க்கையின் சாட்சி வழியாக வெளிக்காட்டினார்கள். இன்று சில மனிதர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று காண்பிக்கும் பொருட்டு கிறிஸ்தவ பெயர்களை வைத்துக் கொள கின்றார்கள், சில அடையாளங்களை தங்களிலும் தாங்கள் ஓட்டிச் செல் லும் மோட்டார் வண்டிகளிலும் மாட்டிக் கொள்கின்றார்கள். ஆலயத்தி ற்கு செல்கின்றார்கள், செல்லும் போது கைகளிலே பரிசுத்த வேதாக மத்தை தூக்கிச் செல்கின்றார்கள். அவைகளில் தவறு ஏதும் இல்லை. இவைகள் பார்வைக்கு அழகான காட்சி. ஆனால் அவைகளைச் செய்வ தினால் நாம் கிறிஸ்துவை உடையவர்கள் (கிறிஸ்தவர்கள்) ஆக மாறிவிட முடியாது. கிறிஸ்துவின் ஆவியை உடையவர்கள் அவரைப் போல தங்கள் வாழ்க்கையின் நற்சாட்சிகளால் பரலோகத்திலிருக்கிற பரம பிதாவை மகிமைப்படுத்துவார்கள். அவர்கள் எப்போதும் பிதாவின் சித்தத்தை தங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றும்படி வாஞ்சையுள்ளவர் களாக இருப்பார்கள். அவர்களிலே பரம பிதா பிரியமாக இருப்பார்.

**ரோமர் 8:9**

**கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.**

**ஜெபம்:** இருதயத்தை ஆராய்ந்தறிகின்ற தேவனே, என் வாழ்க்கை உமக்கு பிரியமுள்ளதாக இருக்கும்படிக்கு, எந்தச் சூழ்நிலையிலும் கிறிஸ்துவி லிருந்த சிந்தையே என்னிலும் இருக்கும்படிக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தரை நம்பினோர் பாக்கியவான்கள்

இந்தப் பூமியிலே வாழும் மனிதர்கள் பல வாக்குகளை மற்றவர்களுக்கு கொடுக்கின்றார்கள். குடும்பங்களிலே, குடும்ப அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் வாக்குகளை கொடுக்கின்றார்கள். உறவினர் நண்பர்களுக்கிடையிலே "நான் இதை உனக்காக செய்து முடிப்பேன்" என்று வாக்கு பண்ணுகின்றார்கள். இன்னுமாய் வேலை செய்யும் இடங்களிலும், கல்வி நிலையங்களிலும் மனிதர்கள் வாக்கு கொடுக்கின்றார்கள். இன்னுமாய் தேர்தல் நாட்களிலே அரசு அதிகாரிகளும் பல வாக்குகளை கொடுக்கின்றார்கள். இவர்கள் சிலர் தாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்றி முடிக்க மனதுள்ளவர்களாக இருந்தாலும் அவைகளை நிறைவேற்றி முடிக்க முடியாமல் மட்டுப்படுத்தப்பட்டவர்களாகி விடுகின்றார்கள். வேறு சிலர், காலப்போக்கில் தாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்ற மனதில்லாதவர்களாக மாறிவிடுகின்றார்கள். இன்னும் சிலர், இந்தப் பூமியை விட்டு கடந்து சென்றுவிடுகின்றார்கள். ஆனால் வாக்குரைத்த தேவனாகிய கர்த்தர் இருக்கின்றவராய் இருக்கின்றார். பொய் சொல்ல அவர் ஒரு மனுஷனல்ல, மனம் மாற அவர் ஒரு மனு புத்திரனுமல்ல. கடையான திசைமட்டும் துரத்துண்டிருந்தாலும், வாழ்க்கையிலே இனி மறுமலர்ச்சி வருவதற்கு சாத்தியங்கள் ஏதும் இல்லை என்பது போன்ற நிலையிலே வாழ்க்கை இருந்தாலும், கர்த்தரை நம்பினோர் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை. "கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன் அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார். பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தி, நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார் அநேகர் அதைக் கண்டு, பயந்து, கர்த்தரை நம்புவார்கள். அகங்காரிகளையும் பொய்யைச் சார்ந்திருக்கிறவர்களையும் நோக்காமல், கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான்." என்று ஒரு தேவ பக்தன் தன் வாழ்க்கையின் அனுபவ சாட்சியை பாடலாக பாடியிருக்கின்றார். பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல. மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? அவர் வாக்குரைத்தவைகளை நிச்சயமாகவே நிறைவேற்றி முடிப்பார்.

**எண்ணாகமம் 23:19**

பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல

**ஜெபம்:** உண்மையுள்ள தேவனே, நீர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கின்றீர். உம்முடைய வாக்கை நம்பி நான் அதன்படி உமது வேளைக்காக காத்திருக்கும்படி பொறுமையைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# திருவசனத்தைக் கைக்கொள்ளுங்கள்

ஒரு மாணவனானவன் தன் ஒன்பதாம் வகுப்பின் முதலாம் தவணைப் பரீட்சையில் பல பாடங்களிலே குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்த தால், அவனுடைய பெற்றோர் அவன் முன்னேற்றத்திற்காக பல முயற்ச் சிகளை எடுத்தார்கள். அவர்களுடைய வீட்டின் அருகிலுள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர், அவனுக்கு உதவுவதற்காக முன் வந்தார். அந்த மாணவனும் அவனுடைய பெற்றோரும் அதைக் குறித்து மகிழ்ச்சியடைந்தார்கள். அந்த ஓய்வுபெற்ற ஆசிரியர், மாணவனை யும் அவனுடைய பெற்றோரையும் அழைத்து அவர்களோடு பேசி, அவ ர்களுக்கு சில ஆலோசனைகளை கூறினார். அதன்படி, இந்த ஆண்டு முடிவுக்குள், நல்ல முன்னேற்றத்தை காணும்படிக்கு, அந்த மாணவன் வீட் டிலே செய்யவேண்டிய காரியங்க ளையும், அவனுடைய பெற்றோர் கொடுக்க வேண்டிய ஒத்தாசையையும் குறித்து எடுத்துரைத்தார். அனு தினமும் மாலை வேளையில் அந்த மாணவனுக்கு ஒரு மணிநேரம் பாடம் சொல்லிக் கொடுத்தார். மாலை வகுப்புக்கள் நன்றாகவே சென்று கொண்டிருந்தது ஆனால் மாணவனுடைய படிப்பில் முன்னேற்றத்தை காணமுடியவில்லை. ஏனெனில், அந்த ஆசிரியர் கூறிய அறிவுரையி ன்படி அவன் வீட்டில் பாடங்களை படிப்பதில்லை. அவன் பெற்றோரும் அதைக் குறித்து பெரிதாக அக்கறை எடுக்கவில்லை. பிரியமானவர்களே, “ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவை களின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை. ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.” என்று ஆண்டவராகிய இயேசு கூறி னார். இது யாவருக்கும் பிடித்த ஒரு அருமையான வாக்குத்தத்தம். இந்த வார்த்தையை சற்று சிந்தித்துப் பாருங்கள். 1. ஆண்டவர் இயேசு சொன்ன வார்த்தைகளை கேட்க வேண்டும். 2. **கேட்ட வார்த்தைக ளின்படி செய்ய வேண்டும்.** 3. அப்போது, நம்முடைய வாழ்க்கை கன் மலையில் கட்டப்பட்ட உறுதியுள்ள வீட்டைப் போல அசையாதிருக்கும். எனவே, தேவ வார்த்தைகளை கேட்டு, அந்த வார்த்தைகளை நாம் நம் வாழ்க்கையில் கைக்கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும்.

**யாக்கோபு 1:22**

அல்லாமலும், நீங்கள் உங் களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கி றவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களா யும் இருங்கள்.

**ஜெபம்**: ஆலோசனைகளின் கர்த்தாவே, நான் என் வாழ்வில் முன்னேறு ம்படிக்கு, உம்முடைய வார்த்தைகளை கேட்டு, தியானித்து, அவைகளை என் வாழ்வில் நான் கைக்கொள்ள எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பருவங்களும் காலங்களும்

மனிதனானவன் தன் வாழ்க்கை வட்டத்திலே பல பருவங்களை கடந்து செல்கின்றான். குழந்தையாக பிறந்து, பிள்ளையாக வளர்ந்து, வாலிப பிரயாயத்தை அடைந்து, பின்பு திருமணமாகி, குடும்பமாகி, வயோதி பத்தை அடைகின்றான். அவனுடைய ஒவ்வொரு பருவத்திலும், உயர் வான நேரங்களையும், தாழ்வான நேரங்களையும், வனாந்திரம் போன்ற அனுபவங்களையும், மலை போன்ற தடைகளையும், கண்ணீரின் பள்ளத்தா க்குகளையும், அக்கினியில் நடந்து செல்லும் காலங்களையும் கடந்து செல் கின்றான். ஒவ்வொன்றிற்கும் ஒவ் வொரு காலமுண்டு வானத்தின் கீழி ருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு. பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு. அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு புலம்ப ஒரு காலமுண்டு, நடன ம்பண்ண ஒரு காலமுண்டு என்று பிரசங்கி மனிதனுடைய வாழ்க் கையில் ஏற்படும் காலங்களை நேர்த்தியாக வர்ணித்துக் கூறியிருக்கி ன்றார். ஆனால் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்தரிப்பதற்கும், அவரை போற்றித் துதிப்பதற்குமுரிய பருவம் எது? காலம் எது? காலங்கள் மாறிப் போகலாம், மனிதர்கள் மாறிப் போகலாம் ஆனால் என்றும் மாறாத தேவன் எப்போதும் இருக்கின்றவராகவே இருக்கின்றார். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார். ஆதலால் கர்த்தரை நாம் எக்காலத்திலும் ஸ்தோத்திரிக்க வேண்டும். அவர் துதி எப்போதும் நம் வாயிலிருக்க வேண்டும். “நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பய த்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார். அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசமடைந்தார்கள் அவர்கள் முகங்கள் வெட்கப்படவி ல்லை. இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள் அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்” என்று தேவ பக்த னாகிய தாவீது தன் வாழ்க்கை அனுபவத்தை பாடலாக பாடியுள்ளார். நாமும் எல்லா சூழ்நிலைகளிலும் அவரை ஸ்தோத்தரிப்போம்.

**சங்கீதம் 34:1**

**கர்த்தரை நான் எக்கால த்திலும் ஸ்தோத்திரிப் பேன் அவர் துதி எப்போ தும் என் வாயிலிருக்கும்.**

**ஜெபம்**: என்றென்றும் மாறாத தேவனே, எந்தக் காலத்திலும் எந்த வேளையிலும் நான் உம்மை மறந்து போகாமலும், எல்லா சூழ்நிலைக ளிலும் உம்மைத் துதிக்கும் உள்ளத்தை எனக்கு தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இளைப்படையாமல் முன்னேறுவோம்

ஒரு ஸ்தாபனத்திலே இரண்டு மனிதர்கள் வேலை செய்து வந்தார்கள். அவர்களில் ஒருவன் மேற்பார்வையாளராகவும், மற்றவன் ஒரு சாதாரண தொழிலாளியாகவும் வேலை பார்த்து வந்தார்கள். அவர்களில் மேற்பார் வையாளராக இருந்த மனிதன் தன் வேலையிலே அசதியுள்ளவனாக இருந்தான். அவன் தன் கடமைகளை நேர்த்தியாக நேரத்திற்கு செய்து முடிப்பதில்லை. ஆனால், சாதாரண தொழிலாளியாக இருந்த மனிதன், தன் மேற்பார்வையாளரின் அசதியை நன்கு அறிந்திருந்த போதிலும், தன் கடமை யிலே கண்ணும் கருத்துமாக இருந்து வந்தான். சில நாட்களிலே அவனுடைய மேற்பார்வையாளர் அவனுக்கு தன்னு டைய வேலைகளையும் கொடுத்து விடுவான். வேலை பழு மிகவும் அதிகமாக இருந்த போதும், அவன் முறுமுறுக்காமல் பொறுமையுடன் அவைகளை செய்து வந்தான். ஆண் டுகள் கடந்து சென்ற போது, குறித்த நாளிலே அந்த மேற்பார்வை யாளரின் வேஷம் களைந்து போனது. அந்த ஸ்தாபனத்தின் இயக்குனர், அந்த மேற்பார்வையாளருக்கு எதிராக கடும் நடவடிக்கையை எடுத்தார். அந்த சாதாரண தொழிலாளியைப் பாராட்டி அவனுக்கு பதவியுயர்வைப் கொடுத்தார். பிரியமான சகோதர சகோதரிகளே, அந்த அநீதியான மேற்பார்வையாளரின் வேஷம் ஒரு நாள் அந்த இயக்குனருக்கும் அங்கு வேலை செய்யும் அதிகாரிகளுக்கும் வெளிப்பட்டது. ஆனால் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு மறைவான காரியங்கள் ஒன்றுமே இல்லை. ஆண்டவராகிய இயேசு சபைகளுக்கு செய்தி அனுப்பிய போது, எபேசு என்னும் சபையை நோக்கி: "உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய் யரென்று கண்டறிந்ததையும் நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறு மையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்" என்று அவர்களுக்கு கூறினார். மேலும் அவர் கூறுகையில், ஆரம்பத்தில் கொண்டிருந்த அன்பிற்கு திரும்பு என்று அவர்களுக்கு அறிவுரை கூறினார். எனவே ஒருவேளை நம்மைச் சூழ இருப்பவர்கள் தவறிப்போனாலும் நாம் தவறிப்போகாமல், பொறுமையோடே, இளைப்படையாமல் பிரயாசப்படுவோம். தேவ அன் பிலே நிலைத்திருப்போம். பரலோகில் கைமாறு மிகுதியாக கிடைக்கும்.

**வெளிப்படுத்தல் 2:7**

**ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்**

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, எங்களை சூழ உள்ளவர்களின் குறைவுகளைக் கண்டு நான் முறுமுறுத்து பின்வாங்கிப் போகாமல் நீர் தந்த பொறுப்பை நிறைவேற்றி முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஞான இருதயம் வேண்டும்

இந்த வருடம் ஆரம்பித்து நான்கு மாதங்களை கடந்து வந்திருக்கின்றோம். கடந்து வந்த பாதையை திரும்பி பார்ப்பது நம் வாழ்வின் முன்னேற்றத்திற்கு நல்லது. இந்த உலகிலுள்ள வியாபார ஸ்தாபனங்கள் மாதாந்தரம் தங்கள் ஸ்தாபனத்தின் நிலையை ஆராய்கின்றார்கள். தாங்கள் இன்னும் முன்னேற வேண்டிய இடங்களை குறித்த திட்டங்களை போட்டுக் கொள்கின்றார்கள். ஸ்தாபனங்கள் மட்டுமல்ல, குடும்பங்களிலே கூட மனிதர்கள் தங்கள் பொருளாதார நிலையை கருத்துடன் பார்க்கின்றார்கள். காரியம் அப்படியாக இருந்தால், நிலையானதும், அசைவில்லாததுமான ராஜ்யத்திற்கென்று ஆயத்தப்பட்டு கொண்டிருக்கும் நாம், நாம் பெற்ற விலை மதிக்க முடியாத இரட் சிப்பைக் குறித்து எவ்வளவாய் கருத்துள்ளவர்களாக இருக்க வேண்டும். "ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும் பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும், இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்." என்று ஆண்டவராகிய இயேசு கடைசி காலத்தைக் குறித்து முன்னறிவித்திருக்கின்றார். ஒரு கொள்ளை நோய் கிருமியானது இந்த உலகத்தை தாக்கி சுமார் ஒரு வருடம் கடந்து சென்றுவிட்டது. அப்படியானால் கொள்ளை நோய்கள் இந்த உலகிலே ஏற்படும் போது மனிதர்கள் என்ன செய்ய முடியும்? தேவ பக்தனாகிய மோசே, "எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப் போட்டோம். எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே. அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம். உமது கோபத்தின் வல்லமையையும், உமக்குப் பயப்படத்தக்க விதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்துகொள்ளுகிறவன் யார்? நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்." என்று கூறினார். எனவே, எங்களுடைய வாழ்க்கையை நாங்கள் ஆராய்ந்து பார்த்து தேவனுடைய கிருபைக்காக நன்றி செலுத்த வேண்டும். வாழ்வின் குறைகளையும் பெலவீனங்களையும் அறிந்து அவைகளை மேற்கொள் ளும்படி எங்கள் வாழ்வை நாங்கள் ஒழுங்கு படுத்த வேண்டும்.

**சங்கீதம் 90:12**

நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.

**ஜெபம்:** அன்புள்ள பரம தந்தையே, நீர் எனக்கு தந்திருக்கும் கிருபையின் நாட்களுக்காக நன்றி. ஒவ்வொரு நாளும் உம்முடைய வருகைக்காக நான் ஆயத்தப்படும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜெபம் செய்வோம்!

உங்கள் வாழ்க்கையை சர்வ வல்லமையுள்ள பிதவாகிய தேவனிடம் ஒப்படைக்க விரும்பினால், பின்வரும் ஜெபத்தை கருத்தோடு ஏறெடுங்கள்!

பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் அன்பான பிதாவே,

நீர் சர்வ வல்லமையுள்ள தேவன்! உம்முடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவை எங்களுக்காக தந்தருளினதிற்காக உமக்கு நன்றி! இயேசுக்கிறிஸ்துவுக்கூடாக நீர் அனுப்பின தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவருக்காக உமக்கு நன்றி!

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இப்பூமியில் மனிதனாக வந்து, பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து, என்னை மீட்பதற்காக பாடுகள்பட்டு தம்முடைய பரிசுத்தமான இரத்தத்தை சிந்தி, சிலுவையிலே எனக்காக மரித்து, பாவத்தை வென்று உயிர்ந்தெழுந்தார் என முற்றிலும் விசுவாசிக்கின்றேன். இன்று நான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை என் வாழ்வின் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கின்றேன்! இதுவரைகாலமும் நீர் என்னை நடத்தி வந்த உம்முடைய மிகுந்த இரக்கங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்!

மற்றவர்களைக் குறித்ததான கசப்பை என் மனதில் இருந்து அகற்றிவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன்! பிறர் எனக்கு செய்த குற்றங்களை மன்னித்துவிட இன்று நான் தீர்மானம் எடுக்கின்றேன். பரிசுத்த ஆவியானவரே எனக்குத் துணைசெய்யும்!

என்னுடைய பாவ பழக்கங்களை விட்டுவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன். நான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை மன்னித்தருளும்! இன்னும் நான் உணராமல் செய்துவரும் தீய பழக்கங்கள் என்னில் இருக்குமாயின் அவைகளை எனக்கு வெளிப்படுத்தும். தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.

தேவனே, மோட்ச வாழ்க்கைக்கு அவசியமானதை என் வாழ்க்கையிலே முதலாவதாக நான் தேட என்னை வழி நடத்தும். இன்று நான் என்னுடைய தேவைகளை உம்முடைய பாதத்தில் வைக்கின்றேன், என் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து என்னை பூரணமாக விடுவித்து தேவ சமாதானம் என் உள்ளத்தை ஆழ கிருபை செய்தருளும்.

கர்த்தாவே நீர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டு அதற்கு பதில் தருகின்ற ஜீவனுள்ள தேவன் என்று நான் முற்றிலும் விசுவாசிக்கின்றேன்! உம்மை உண்மையாய்த் தேடு கிற யாவருக்கும் சமீபமாகவுள்ள கர்த்தர் நீர்! பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவ னுக்காகிலும் உதவிகள் செய்வது உமக்கு லேசான காரியம்!

காரிருள் சூழ்ந்திருக்கும் இந்த உலகத்திலே, உம்முடைய வார்த்தையின் வெளிச்ச த்திலே ஜீவிக்க பிரகாசமுள்ள மனக்கண்களைத் தாரும்.

எனக்காக மரித்து உயிர்த்த கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் கேட்கிறேன் நல்ல பிதாவே, ஆமென்!

# அன்பான வாசகர்களுக்கு!

## உங்கள் **'உள்ளான மனிதன்'** பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்

உள்ளான மனிதன் சஞ்சிகையை ஒரு சபையினூடாக பெற்றிருந்தால், தொடர்ந்தும் மாதாந்தர பிரதியை பெற்றுக்கொள்ள, அந்த சபையின் போதகரை தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள சபையின் ஊடாக உள்ளான மனிதன் சஞ்சிகை விநியோகிக்கப்படாவிடில், அடுத்த பக்கத்திலுள்ள படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, இந்தியாவில் இந்த சஞ்சிகையை அச்சிட்டு வெளியிடுகிறவர்களின் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

ஒவ்வொரு மாதமும் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றய சகோதர சகோதரிகளுடனும் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். இரட் சிப்பு தேவனிடத்திலிருந்து வரும்!

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

அந்த ஆச்சரியமான மாறாத தேவ அன்பு இன்றும் யாவரையும் இருளின் அதிகாரத்திலிருந்து ஆச்சரியமான தேவ ஒளிக்குள் வரும்படியாய் அழைக்கின்றது. ஆமென்!

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909 gtachurch.ca**

gtachurch.ca

உள்ளான மனிதன் மாதாந்த இலவச பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

________________________________________

________________________________________

**முகவரி ADDRESS:**

(தபால் உங்கள் இருப்பிடத்திற்கு வந்தடைய தேவையான முழு முகவரி விபவரங்களையும் குறிப்பிடவும்)

________________________________________

________________________________________

________________________________________

## மேலதிக விபரங்கள்

**whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

**Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**கை தொலைபேசி MOBILE PHONE:** ____________________

**மின் அஞ்சல் E-MAIL:**

________________________________________

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052,**
**MARKHAM, ON L3S 4T1 - CANADA**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE-MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca